# செந்தமிழ்ச் செல்வி

## உள்ளுறை



சிலம்பு ௪௯] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௬, சித்திரை (May'75) [பரல்-௯

# ‘செந்தமிழ்ச் செல்வி’

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்



---

# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு ௪௯ | திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௬, சித்திரை<br>மே 1975 | பரல் ௯ |
|---|---|---|


## மனோன்மணீயம் நாடகப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களின் திருவுருவச்சிலைக்கு 'அனிச்ச அடி' வழி காட்டுகின்றது

1891ஆம் ஆண்டில் பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள் 'மனோன்மணீயம்' என்னும் ஒப்புயர்வற்ற சீரிய இலக்கிய நாடகத்தை முதன்முதல் இயற்றிப் பெரும் புகழ் பெற்றார். அந் நாடகத்தின்வழிப் பேராசிரியர் ஆங்கிலத்தில் பல துறைகளில் பேரறிவாற்றல்களும் அதேபோல தமிழிலும் பல துறைகளில் பெரும்புலமையும் பெற்றிருந்தனர் என்பது நன்கு புலனாகின்றது. இத்துணை அறிவாற்றல் மிக்க பெருமகனார் இப் பூவுலகில் 42 ஆண்டுகளே வாழ்ந்து மறைந்தனர் என்பது தமிழ் மக்களின் தவக் குறைவேயாகும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் மனோன்மணீயம் 1933இல் பாடமாக வைக்கப் பெற்றது. எனவே அவர்களுடைய திருமகனார் திரு. பெ. சு. நடராசபிள்ளை அவர்களிடம் அதற்கு விற்பனை உரிமை பெற்று மூன்றும் பதிப்பாகக் குறிப்புரை, விளக்கச் சிற்றுரை, மேற்கோள் விளக்கம், வரலாற்று விளக்கம் ஆகியவற்றை எழுதிச் சேர்த்துக் கழகவழி வெளியிட்டோம். இதுகாறும் 14 பதிப்புகள் வெளிவந்துள்ளன. பேராசிரியர்க்குத் திருவுருவச்சிலை எடுத்தல் வேண்டுமென்ற எண்ணம் முன்னமே தோன்றியிருப்பின் கழக வழியாகவே அதனை நிறுவியிருக்கலாம். பாடநூல்களை அரசு வெளியிடுகின்றமையால் கழகம் மூன்று நூல்நிலையங்களை நடத்துவதற்குப் போதிய வருவாய் இன்மையால் அரசிடம் பொருளுதவி கேட்கவேண்டிய

நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. மேலும் 1947இல் மனோன் மணியத்தை அச்சிடும் உரிமை பொதுவுடைமையாகிவிட்டமை யால் பதிப்பாளர் சிலர் அதனை அச்சிடுவாராயினர். எனினும் கழகப் பதிப்புக்குமட்டும் தனிமதிப்பு இருந்து வருகிறது. ஆயினும் சிலை நிறுவுவதற்குத் தேவைப்படும் முழுச் செல வினையும் கழகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை; இஃதுண்மை.

சென்னைப் பல்கலைக் கழகம் மனோன்மணிய நாடகத்தைப் பாடமாக வைக்காதபோது சில ஆண்டுகளில் மறைத்திரு மறைமலையடிகளார் உரைநடையில் செவ்விதாக ஆக்கிய காளிதாசர் சாகுந்தல நாடகம் பாடமாக வைக்கப் பெறுவ துண்டு. அடிகளார் அதற்குத் தனியே ஆராய்ச்சி நூலொன்று எழுதி அச்சிட்டுள்ளார்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. சாகுந்தல நாடக மொழி பெயர்ப்பினைக் காஞ்சி காமகோடிபீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் பெரிதும் பாராட்டிப் பரிசுத் திட்டம் ஏற்படுத்தியுள்ளார்.

இவ்விரண்டு நாடகங்களைத் தவிர வேறு தகுந்த நாடகங்கள் இல்லையே என்ற குறையினைப் பல்கலைக் கழகப் பாடநூற் குழுவினர் பேசுவதுண்டு.

எனவே 21-4-1971இல் மனோன்மணியம் போன்றதோர் இலக்கிய நாடகம் எழுதப் பெறுதல் வேண்டுமென்றும் அங்ஙனம் ஏற்றுக் கொள்ளத்தக்க நாடகத்துக்கு ஆயிர ரூபா பரிசு அளிப்பதென்றும் திட்டம் ஏற்படுத்தி ஓர் அறிக்கையினைக் கழகம் வெளியிட்டது. அப்பரிசுப் போட்டிக்கு வரப்பெற்ற ஒன்பது நாடகங்களுள் காரைக்குடிப் புலவர் ஆ. பழனி அவர்கள் எழுதிய 'அனிச்ச அடி' என்னும் நாடகம் ஏறக் குறைய மனோன்மணியத்துக் கொப்பதொரு நாடகமாக இருப்ப தறிந்து அதற்கு ஆயிர ரூபா பரிசு வழங்குவதென்று மதிப்பீட்டுக் குழுவிலுள்ள உறுப்பினர்கள் முடிவு செய்தனர்.

4-8-1973இல் மதிப்புமிகு செட்டிநாடு பேரரசர் டாக்டர் மு. அ. முத்தைய செட்டியாரவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக ஆட்சியாளரின் பவள விழாவிலே தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 'அனிச்ச அடி' பற்றிப் பாராட்டிப் பேசி அதனை வெளியிட்டதோடு அதன் ஆசிரியரவர்கட்குப் பொன்னாடை போர்த்தி ரூபா ஆயிரம் பரிசுத் தொகையும் வழங்கியருளினர்.

மனோன்மணீய நாடகப் பேராசிரியர் திருவுருவச்சிலை யமைப்பதற்குக் கழக ஆட்சிக் குழுவினர் 'அனிச்ச அடி' நாடக விற்பனை ஊதியத்திலிருந்து 100க்கு 10 விழுக்காடு ஒதுக்குவ தெனத் தீர்மானித்துள்ளனர். நாடக ஆசிரியரவர்கட்கும் அதே போல் விற்பனை ஊதியத்திலிருந்து 100க்கு 10 விழுக்காடு ஒவ்வொரு பதிப்புக்கும் வழங்கப் பெறும். இக் குறிப்புகள் அனிச்ச அடி முகப்புப் படிவத்தில் அச்சிடப் பெற்றிருக்கின்றன.

1969 சனவரி தொடக்கத்தில் நடைபெற்ற உலகத்தமிழ் இரண்டாவது விழாவில் சென்னைக் கடற்கரையில் ஆன்றோர்க்கும் சான்றோர்க்குமாகச் சிலைகள் பத்து நிறுவப்பெற்றன. அச் சான்றோர்களில் எங்ஙனமோ மனோன்மணீயம் நாடகப் பேரா சிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கட்குச் சிலை எடுத்தல் வேண்டுமென்று எங்கும் எவராலும் பேசப்படவில்லை.

அக்குறை 'அனிச்ச அடி' என்னும் நாடகத்தால் இப் போது நீங்கிவிடும் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சி தருகின்றது.

மதுரைப் பல்கலைக் கழகம் 1974—75 பி.ஏ. பி.எஸ்ஸி. பட்டப் படிப்புக்கு 'அனிச்ச அடி'யைப் பாடமாக அமைத் துள்ளது. அதன்வழிப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை திரு வுருவச் சிலைக்கு ரூ. 7,000 வரை கிடைத்துள்ளது. சிலை வகைக்குக் கழக ஆட்சியாளரும் ரூபா ஆயிரம் வழங்குவர். அதனால் சிலை வகைக்கு ரூபா 8,000 சேர்ந்திருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகம்போல் சென்னைப் பல்கலைக் கழகமும் அனிச்ச அடியைப் பாடமாக அமைத்திருக்குமாயின் கிட்டத் தட்ட சிலை நிறுவுவதற்குரிய தொகை சேர்ந்திருக்கும். ஆனால் சென்னைப் பல்கலைக்கழகம் மூன்று ஆண்டுகட்கு முன்பு வெளி யிடப்பெற்ற நூலாக இருத்தல் வேண்டுமென்ற விதிக்கு விலக் களிக்கவிரும்பாமையால் 'அனிச்ச அடி' பாடமாக அமைக்கப் பெறவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

தமிழ், தமிழ் இனம், தமிழ்நாடு ஆகியவற்றின் முன்னேற் றத்திற்குச் சிலர் இடையூறு விளைவித்துக்கொண்டிருந்த காலத் திலே பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் துணிந்து தாம் இயற்றிய மனோன்மணீயம் தமிழ்த்தாய் வணக்கப் பாடல்களின் வழித் தமிழ் மக்களிடையே புத்துணர்ச்சியைத் தட்டி எழுப் பினர் என்றால் அது மிகையாகாது. கால்நடை மருத்துவத் துறையில் முதன்மைக் கண்காணிப்பாளராக இருந்தவரும், கம்பராமாயண சாரம், சுவர்க்க நீக்கம், கால்நடை மருத்துவம்

முதலிய நூல்களை இயற்றிய முதுபெரும்புலவரும் ஆகிய வெள்ளகால் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் கழகத் தொண்டைப் பெரிதும் பாராட்டி வந்தவர்களாவர். ஒருமுறை அவர்கள் என்னோடு பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது சொன்னதாவது :

"பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் திருக்குற்றாலத் துக்குவரின் அவர்கள் நண்பர்களுடன் மலைமேல் ஒதுக்கமா யுள்ள பாறைக்குச் சென்று அதன்மேல் அமர்ந்து தமிழ்நிலை, தமிழர்நிலை, தமிழ்நாட்டு நிலை ஆகியவற்றைப் பற்றிப் பேசுவ துண்டு" என்பதாகும். அந்தக் காலம் அப்படிப்பட்டது என்பதை உணர்த்தினர்.

பேராசிரியர் அவர்கட்கும், மறைத்திரு மறைமலையடி களார்க்கும் நாகைப் புத்தக வணிகர் திரு நாராயணசாமி பிள்ளை அவர்களே இயற்றமிழ் ஆசிரியராவர். அடிகளார் கிறித்தவக் கல்லூரியில் ஆசிரியர் பணி ஏற்பதற்குப் பேராசிரியர் அவர்கள் கொடுத்த சான்றிதழ் நன்கு பயன்பட்டது. பேராசிரியரவர்கள் பல துறை நூல்களை இயற்றியதோடு பலர்க்கும் கல்வித் துறையில் உதவி செய்த பேரருளாளருமாவர்.

**கல்லூரிப் பேராசிரியர்களின் கடமை**

பேராசிரியர் அவர்கட்குத் திருவுருவச் சிலை எடுப்பது கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்களின் தனிப்பெருங் கடமை யாகும். எனவே, அவர்களெல்லாரும் முன்வந்து ஒவ்வொரு கல்லூரியிலும் ரூ. 200 முதல் ரூ. 500 வரை நன்கொடை திரட்டி அனுப்பி வைப்பின் பேராசிரியர் அனைவராலும் நிறுவப் பெற்ற திருவுருவச் சிலை என்ற பெயர் துலங்கும் என்பதைத் தெரிவித்துக் கல்லூரிப் பேராசிரியன்மார்களைக் கடமை யுணர்வோடு வேண்டிக்கொள்ளுகிறேன்.

பேராசிரியர் திருவுருவச்சிலை நிறுவுவதற்குச் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்துக்கு எதிரிலுள்ள இடமே மிகவும் பொருத்தமாயிருக்கும் என்பது எனது மனத் திற்பட்ட கருத்தாகும்.

வ. சு.

---

# உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

## புல்⁶—துளைத்தற் கருத்து வேர்ச்சொல் (தொடர்ச்சி)

குறிப்பு :

துளைத்தல் என்பது, குழித்தல், குடைதல், தோண்டுதல், துளையிடுதல், துருவுதல் என்றும்; குத்துதல், வெட்டுதல், கிள்ளுதல், கீறுதல், சீவுதல், சிதைத்தல், அறுத்தல், கிழித்தல், பிளத்தல், உடைத்தல், பகுத்தல் (பிரித்தல்), துண்டித்தல், (துண்டு பண்ணுதல்), பொடித்தல் என்றும்; குலைத்தல், கலைத் தல் என்றும்; வினைக்கும் கருவிக்கும் ஏற்றவாறு பல திறப்படும்.

மாழையும் (metal) கல்லும் மரமும் போன்ற வன்பொருட்கள் கருவிகளாலும், கனிகளும் உண்டி வகைகளும் களிமண்ணும் போன்ற மென்பொருட்கள் கருவியாலும் கையாலும், துளைக்கப்படும்.

சில பொருட்கள், தக்க நிலைமை வரின், நிலம் வெடிப்பதும் கனிபிளப்பதும் போல, தாமாகவே துளையுண்ணும்.

குழித்தல் குடைதல் போன்றன ஆழவாட்டில் துளைத்தல்; வெட்டுதல், அறுத்தல் போன்றன நீளவாட்டில் துளைத்தல்.

குழித்தலுங் கீறுதலுங் குடைதலும் போன்றன குறையத் துளைத்தல்; துருவுதலும் வெட்டுதலும் பிளத்தலும் போன்றன நிறைய அல்லது முற்றத் துளைத்தல்.

முற்றத் துளைத்தலால், பகுத்தல், பிரித்தல், துணித்தல், பொடித்தல் முதலியன ஏற்படுகின்றன.

[பிரி—பிரிவு. ஒ. நோ : L. pars, partis, portionem]

முன் கட்டுரைத் தொடர்ச்சி :

பள்ளி=5. படுக்கையறையுள்ள வீடு. 6. வீடு. 7. வீடு போன்ற இடம், இடம். "சொல்லிய பள்ளி நிலையின வாயினும்" (தொல். எழுத். பிறப். 18), "சொல்லிய பள்ளி எழுதரு வளியின்" (ஷை ஷை ஷை 20). 8. தச்சன் பணி செய்யும் இடம், பட்டறை, "தச்சன் வினைபடு பள்ளி" (களவழி. 15). 9. அரசன் வீடாகிய அரண்மனை. பள்ளிக்கட்டில்= அரியணை, "நின்பள்ளிக் கட்டிற் கீழே" (திவ். திருப்பா. 22).

பள்ளிக்கட்டு = இளவரசியின் திருமணம். (நாஞ்.). பள்ளித் தேவாரம் = அரண்மனைத் தெய்வ வழிபாடு. (நாஞ்.). 10. தெய்வ வீடாகிய கோவில். "கழாஅக்கால் பள்ளியுள் வைத் தற்றால்" (குறள். 840). 11. சமண புத்தர் கோவில். "புத்தர் நோன்பியர் பள்ளியுள்ளுறை" (திவ். பெரியதி. 2 : 1 : 5). 12. முகமதியர் கோவில், பள்ளி வாசல். 13. இறந்த அரசரின் நினைவுக் குறியாகக் கட்டப்பட்ட கல்லறை. (S. I. I. iii, 24). பள்ளிபடைப் படலம். (கம்பரா.). 14. முனிவர் தவநிலையம். "மாதவி மாதவர் பள்ளியுளடைந்ததும்" (மணி. 18 : 8). 15. அறச்சாலை, அயலாரையும் இரப்போரையும் உண்பிக்கும் ஊர் மடம். 16. மடத்திலும் கோவிலிலும் நடத்தப் பெற்ற கல்விக் கூடம். "பள்ளியி லோதிவந்த தன் சிறுவன்" (திவ். பெரியதி. 2 : 3 : 8). 17. அரண்மனை அல்லது கோவில் உள்ள நகரம். (பிங்.). 18. தாழ்வான கூரை வீடுகளுள்ள இடைச்சேரி. "காவும் பள்ளியும்" (மலைபடு. 451). 19. இடைச்சேரி போன்ற சிற்றூர். (பிங்.).

பள்ளம் என்பது நில மட்டத்தினும் தாழ்வான இடம். நிற்கும் நிலையினும் படுக்கும் நிலை தாழ்வாயிருப்பதால், படுக்கை அல்லது படுக்குமிடம் பள்ளியென்றும், படுத்துத் தூங்குதல் பள்ளி கொள்ளுதல் என்றும், சொல்லப்பட்டன.

பள்ளி மாடம் = அரசர் துயிலும் மாடம். "பள்ளிமாட மண்டபம்" (சீவக. 145.) பள்ளியந் துலா = துயிலும் பல்லக்கு. "பள்ளியந்துலா வேறுவர்" (மதுரைப் பதிற். 19). பள்ளி யோடம் = படுக்கை யமைந்த படகு.

பகலெல்லாம் அங்கு மிங்கும் அலைந்து திரிந்து உணவு தேடிய முதற்கால அநாகரிக மாந்தனுக்குப் போன்றே, இக் கால நாகரிக மாந்தனுக்கும், பாதுகாப்பாக இராத்தங்கி இனி தாக உறங்குதற்கு வீடு இன்றியமையாததா யிருத்தல் காண்க. பள்ளி கொள்ள உதவாத அமைப்பு உண்மையான வீடாகாது.

பல வீடுகள் சேர்ந்ததே ஊராதலின், வீட்டுப் பெயர் சினையாகு பெயராக ஊரையுங் குறிக்கும்.

எடுத்துக் காட்டு :

குடி = வீடு, ஊர் (காரைக்குடி, மன்னார்குடி).

இல் = வீடு, ஊர் (அழும்பில், கிடங்கில்).

பள்ளி = வீடு, ஊர் (திருக்காட்டுப் பள்ளி, திருச்சிராப் பள்ளி).

நகர் = வெண்சுதை தீற்றிய காரை வீடு அல்லது மாளிகை, அத்தகைய வீடுள்ள ஊர்.

ம. பள்ளி, தெ. பல்லிய, பல்லெ, க. ஹள்ளி, வ. பல்லி.

பொது மக்கள் பணத்திலிருந்து நாலரை யிலக்கம் உருபா செலவிட்டுத் தொகுத்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகர முதலியில் (Lexicon), பள்ளி என்னும் தூய பழந்தென் சொல் பல்லி என்னும் வடசொல்லின் திரிபாகக் காட்டப்பட்டிருப்பதும், அதை யெடுத்துக் கூறியும் பெருந்தமிழ்ப் பேராசிரியருள்ளும் இரண்டொருவர் தவிர ஏனையரெல்லாம் பேசா மடந்தையர் போல் மானமின்றி வாளா விருப்பதும், மருட்கைக் குரிய செய்தி களாகும்.

பள்ளி—பாளி—பாழி = 1. மக்கள் துயிலிடம். "பெரும் பாழி சூழ்ந்த விடத்தரவை" (திவ். இயற். 1 : 20). 2. விலங்கு துயிலிடம். (பிங்.). 3. கோயில். "ஐயன் பாழியில் ஆனை போர்க்குரித்தாம் அன்று" (ஈடு, 1 : 1 : 5). 4. முனிவர் உறை விடம். (பிங்.). 5 இடம். "வானவர் கோன் பாழி" (திவ். இயற். 2 : 13). 6. மருத நிலத்தூர். (சூடா.). 7. நகரம். பிங். ஒ. நோ. Gk. polis, city. 8. சிறு குளம். "பூழி நாட்டார்.........சிறுகுளத்தைப் பாழி என்றும்......வழங்குப." (தொல். சொல். 400, நச். உரை). ஒ. நோ: OE., MLG. pol, E. pool. 9. எலிவளை, எலிப்பாழி. (உ. வ.). 10 குகை. (திவா.).

பள்—பள்ளை = 1. குள்ளம். 2. குள்ளமான பள்ளையாடு. ப. க. பட்டெ (dd)

பள்ளை—பள்ளையன் = குள்ளன், குறுகிப் பருத்தவன். (யாழ், அக).

பள்ளையன்—பள்ளச்சி = குள்ளி (யா). பள்ளையம் = 1. பள்ளமான உண்கலம். (W). 2. சிறுதெய்வப்படையல் உயரத்தை நோக்கக் குள்ளம் பள்ளமாயிருத்தல் காண்க. பள்ளம்—தாழ்மட்டம்.

பள்—பள்கு, பள்குதல் = பதுங்குதல். "பள்கி நோக்குபு பயிர்த்து நடந்தான்" (சூளா, சுயம். 31).

பள்—பண் = 1. நீர்நிலை. "பண்குலவத் தாலமிசை நடித்து" (குற்று, தல, திருநதிச். 12). 2. நீர்நிலை போன்ற வயல், வயலிற் செய்யும் வேலை, தொழில்.

பண்—பண்ணை[1] =விலங்கு துயிலிடம். (பிங்).

பண்ணை[2] =1. மருத நிலம். "வளநீர்ப் பண்ணையும் வாவியும்" (சிலப். 11 : 13). 2. வயல். (பிங்). "பண்ணை சூழ்ந் திலகுந் திருமுனைப் பழைய நாடு" (பாரத. பாயி. 6) "வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீரேரியும்" (சிலப். 13: 192). 3. நீர்நிலை. (பிங்.) 4. மரத்திற்கு அடியில் நீர் பாய்ச்சுமாறு சுற்றிவரத் தோண்டி வைக்கும் பள்ளம். மரத்திற்குப் பண்ணை பிடிக்க வேண்டும். (உ. வ.) 5. நிலக்கிழாரே செய்யும் பயிர்த்தொழில். (C. G.). 6. வாரக்குடி. 7. நெற்குத்துமாறு நடுவிற் பள்ளஞ்செய்து நிலத்திற் பதிக்கப்பட்ட வட்டக்கல். 8. பல்லாங்குழி விளையாட்டிற்கு நிலத்தில் தோண்டப்படும் குழி.

க. பண்ணெய.

பண்ணையார் =பெருநிலக்கிழார். பண்ணையாள் =வாரக் குடியான்.

பண்ணையாளி — பண்ணையாடி — பண்ணாடி = வாரக்குடி வைத்துப் பயிர் செய்யும் பெருநிலக்கிழார்.

பண்ணை—பணை[1] = 1. விலங்கு துயிலிடம், (பிங்). 2. யானை குதிரைகள் தங்குமிடம். "பணைநிலை முனைஇக் களிறுபடிந் துண்டென" (புறம். 23). "பணையமை பாய்மான்" (கலித். 57).

பணை[3] =1. மருதநிலம். "பெருந்தண்பணை பாழாக" (புறம். 16). 2. வயல். "இரும்பணை திரங்க" (பதிற்றுப். 43.12). 3. நீர்நிலை. (பிங்).

பண்—பணி. பணிதல்=1. தாழ்தல். "பணியியரத்தை நின் குடையே" (புறம். 6)., 2. செருக்கின்றியடங்குதல். "எல்லார்க்கு நன்றும் பணிதல்" (குறள். 125), 3. இறங்குதல் (W). 4. தாழ்வாதல். 5. குறைதல். (யா) 6. எளிமை யாதல். (யா). 7. வணங்குதல். "உடையான் கழல் பணிந்திலே" (திருவா. 5:35) பணிந்தவன்=குள்ளன் (W).

ம. பணியுக.

பணித்தல்=1. தாழ்த்துதல். "வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப" (பு. வெ. 4:9, கொளு). 2. குறைத்தல். (W) 3. மிதித்தல், "நந்துமாமையும் பணித்து" (சீவக. 2109)

பணிவிடை = தொண்டு, குற்றேவல். திருப்பணி = தெய்வத் தொண்டு.

பணி—படி, படிதல் = 1. அடியில் தங்குதல். வண்டல் படிந்திருக்கிறது. (உ. வ.). 2. தங்குதல். "பறவை படிவன வீழ" (நெடுநல். 10). 3. வயமாதல். "அடியாத மாடு படியாது" (பழ.). 4. கீழ்ப்படிதல். பெரியோர்க்குப் படிந்து நடத்தல் வேண்டும். (உ. வ.) 5. குளித்தல். "தடங்கடலிற் படிவாம்" (திருவாச. 38:9) 6. அமுங்குதல். "எண்ணெய் தேய்த்துச் சீவினால் மயிர் படியும்." (உ.வ.). 7. தணிதல், வெள்ளம் படிந்தது. (உ.வ.) 8. கீழே விழுந்து வணங்குதல். "சிரந்தலத்துறப் படிந்து" (உபதேசகா. சிவத்து. 344).

பணி செய்வோன் = 1. வேலைக்காரன். 2. விழாக் காலத்தில் தாரையும், இழவு நாளில் சங்கும் ஊதுபவன். கீழ்ப்படிதல் = சொன்னபடி செய்து பணிவாய் நடத்தல்.

பணி—பாணி, பாணித்தல் = 1. காலந் தாழ்த்தல். "பாணிதீ நின்சூள்" (பரிபா. 8:56). 2. காத்திருத்தல். "பாணியே மென்றூர்" (கலித். 102). 3. பின்வாங்குதல். "சமரிற் பாணியான்" (கந்தபு. மூவாயிரர். 59).

பாணி = பள்ளமான இடத்தில் தங்கும் அல்லது பள்ளம் நோக்கி ஓடும் நீர். "விண்ணியல் பாணியன்" (பதினொ பொன்வண். 30).

க. பாணி, மரா. பாணி, இ. பானீ.

நீரைக் குறிக்கும் பாணி என்னுஞ்சொல் வடமொழியில் இல்லை. நீரம் என்னும் தமிழ்ச்சொல் வடமொழியில் நீர என்று கடைக்குறைந்து வழங்கும்போது, பாணி (நீர்) என்னும் சொல் இந்தியில் பானீ என்று திரிந்து வழங்குவது இயற்கைக்கு மாறன்று.

பண்—பண்ணல் = 1. வயலைத் திருத்துதல். 2. பயிர் செய்தல். "பண்ணிய பயிரில் புண்ணியந் தெரியும்." (பழ.). 3. வேலை செய்தல். 4. செவ்வையாயமைத்தல். 5. அழகு படுத்துதல். 6. அணியமாக்குதல் (ஆயத்தஞ் செய்தல்) 7. இசையெழுவும் எண்வகையுள் ஒன்று. "பண்ணல்...... எண்வகையா லிசையெழீஇ" (சிலப். 7:5-8).

பண்—பண்ணு. பண்ணுதல் = 1. பயிர் செய்தல். 2. வேலை செய்தல். 3. செய்தல். "உம்பர்க் கிடந்துண்ணப்

பண்ணப்படும்'' (நாலடி. 37). 4. செவ்வைப்படுத்துதல். 5. அழகுபடுத்துதல். ''பட்டமொ டிலங்கப் பண்ணி'' (சூளா. கல்யா. 14). 6. அணியமாக்குதல். ''பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்'' (புறம் 12). 7. யாழ் நரம்பில் அலகு (சுருதி) அமைத்தல், 8. பண்ணிற்கேற்ப யாழ் நரம்பமைத்தல் ''மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்'' (மலைபடு. 534). 9. சமைத்தல். ''பாலு மிதவையும் பண்ணாது பெறுகுவிர்'' (மலைபடு. 417). 10. உண்டாக்குதல். பானை சட்டி பண்ணுகிறவன் குயவன். (உ. வ.).

மாந்தன் முதன்முதற் கற்றுக் கொண்ட கைத்தொழில் உணவு விளைக்கும் பயிர்த்தொழிலாதலால் பண்ணுதல் என்னும் பண்ணை வினையைக் குறித்தசொல்லே பொதுவினையைக் குறிக்குஞ் சொல்லாயிற்று.

ஒ. நோ: கை=கைத்தொழில், பயிர்த்தொழில்.

''இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.'' (குறள். 1035)

பண்—பணி=1. கைத்தொழில். பணிக்களரி=தொழிற் சாலை, பட்டறை, ''கொல்லனது பணிக்களரியாகிய குறிய கொட்டிலிடத்தனவாயின.'' (புறம் 95, உரை). 2. அழகு பண்ணும் அணிகலம். (பிங்.) ''பணியெலாம் பணியதாகி'' (கந்தபு. ததீசியுத். 106). 3. வேலைப்பாடு. ''பணிபழுத் தமைந்த பூண்'' (கம்பரா. இலங்கை கே. 12). 4. பிழைப்புத் தொழில்.

ம. பணி. பணித்தட்டார் = பொற்கொல்லர். ''பணித் தட்டார் பணிபண்ணுமிடங்களில்'' (சிலப். 6 : 135, உரை).

பணி—பணிக்கு=வினைத்திறமை.

பணிக்கு செலுத்துதல் = வேலையாட்களின் வேலையை மேற்பார்ப்பவன். (W.).

பணிக்குசொல்லுதல்=வேலைசெய்யும் முறையைக் காட்டுதல். (W.). 2. பிறர் வேலையிற் குற்றங்கூறுதல். கட்டத் தெரியாவிட்டாலும் கட்டின வீட்டிற்குப் பணிக்கு சொல்வான். (உ. வ.).

பணிக்கு—பணிக்கம்=வினைத்திருத்தம், தொழிற்றிறமை. (W.).

பணிக்கம்—பணிக்கன் =1. வினைத்திறவோன். 2. ஆசிரியன் (பிங்.). 3. படைக்கலம் பயிற்றுவோன். "படையாளொரு பணிக்கன் தோன்றி" (திருவாலவா. 35 : 1). 4. கூத்துப் பயிற்றுவோன் ஆடலாசிரியன். 5. தலைமைக் கொற்றன். (W.). 6. யானைப்பாகன். (W.). 7. நஞ்சி மருத்துவன்.

கையைக்குறிக்கும் பாணி என்னுஞ் சொல் வடமொழியிற் சிறப்பாக வழங்கினும், அதற்கு மூலமாகக் காட்டப்படும் பண் என்னுஞ் சொல்லிற்கு, பண்டமாற்றுதல், பணயம் வைத்தல், பேரம் பேசுதல் என்னும் பொருள்களே உள. அவை பொருந்துவனவல்ல.

எந்தப் பொருளையும் தொழிலையுஞ் செய்தற்குக் கை இன்றியமையாத உறுப்பாதலால், செய்தலைக் குறிக்கும் சொல்லினின்று கைப்பெயர் அமைவதே இயற்கைக்குப் பொருத்தமாம். பண் (பண்ணு)—பாண்—பாணி (=பண்ணி).

தண்டபாணி = தண்டம் (தண்டு + அம்) ஏந்திய கையன், முருகன். தண்டம் என்னும் சொல்லும் தவருக வடசொல்லெனக் கருதப்படுகின்றது.

ஒ. நோ.: செய்—தெ. சேயி (c), க. கெய், கெய்யி, து. கை. செய்—கெய்—கை.

கை யென்னும் பெயர், செய் என்னும் வடிவில் குமரி நாட்டில் வழங்கியிருத்தல் வேண்டும்.

கரு—வக்ரு—கர = கை. கருத்தல் செய்தல். இவ் வினைச் சொல் கடைக்கழகக் காலத்திற்கு முன்பே வழக்கற்றுப் போயிற்று. கருமம், கருவி, கரணம் முதலிய சொற்களை நோக்குக.

பண்ணுதல் என்னுஞ்சொல், அலகு பண் என்னும் இரு வகையில் இசையமைத்தலைக் குறிக்க ஆளப்பட்டதனுல், பண் என்னுஞ்சொல் இசை வகையையுங் குறித்தது.

பண்ணலாவது :—

'வலக்கைப் பெருவிரல் குரல்கொளச் சிறுவிரல்
விலக்கின் றிளிவழி கேட்டும்
இணைவழி யாராய்ந் திணைகொள முடிப்பது
விளைப்பரு மரபிற் பண்ண லாகும்.' (சிலப். 7 : க, பழங்குறிப்புரை)

"பண்ணல்—பாட நினைந்த பண்ணுக்கு இணை கிளை பகை நட்பான நரம்புகள் பெயருந் தன்மை மாத்திரை யறிந்து வீக்குதல்." (சீவக. 657, நச். உரை).

௯. நோ: செய்—செய்யுள்.

"வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" (நன். 268)

செய்யுள் இசைப்பாவிற்கு இனமானதே, பாட்டு, பாணி, தேவபாணி, பெருந்தேவபாணி என்னுஞ் சொற்கள், செய்யுட்கும் இசைப்பாவிற்கும் பொதுவாக வழங்குதல் காண்க.

பண் = 1. இசைவகை. "பண்ணென்னும் பாடற் கியைபின்றேல்" (குறள். 573). 2. எழுமுரல் (சுர) இசை வகை. "பண்ணுந் திறனும்" (பெருங். வத்தவ. 3 : 56). "நிறைந்த நரம்பு நிகழும் பண்ணெனல்." (பிங். 6 : 324). 3. இசைப்பாட்டு. (பிங்.). 4. நரப்புக் கருவிகளான யாழ் வகைகள். "பண்கெழு மெல்விரலால்" (சீவக. 220).

பண்—பான் = பாட்டு. "பூணினுன்றன் பான்வலைச் சென்று பட்டாள்" (சீவக. 2040).

பாண்—பாணன் = இசையும் இசைத் தமிழும் வளர்த்த பண்டைத் தமிழ வகுப்பான். "கூத்தரும் பாணரும்" (தொல். புறத். 36).

பாணன்—பாணுன் = ஆரியச் சூழ்ச்சியால் இசைத் தொழி லிழந்து தையல் வேலை செய்யும் தமிழ வகுப்பான்.

பாணன்—பாண் = பாணர் குலம்.

பாண்—பாணு = பாட்டு. "பாணு வண்டரற்றுங் கோலச் சிகழிகை" (சீவக. 2447).

பாணன்—பாணி = பாணன் மனைவி, பாணர் குலப்பெண். "என் கொணர்ந்தாய் பாண நீ யென்றாள் பாணி" (தனிப் பாடல்).

பாண்—பாடு. பாடுதல் = 1. பண்ணிசைத்தல். "மறம் பாடிய பாடினியும்மே" (புறம். 11). 2. வண்டு இமிழ்தல். "வண்டு பல விசைபாட" (திவ். பெரியதி 3 : 9 : 3). 3. செய்யுள் செய்தல். "பாடினர் பல்புகழைப் பல்புலவர்" (பு. வெ. 8 : 1). 4. செய்யுளாற் புகழ்தல். "பாடுகம் வம்மினோ பரிசின் மாக்கள்" (புறம். 32). 5. சண்டையில் வைதல். அவளை நன்றாய்ப் பாடிவிட்டாள். (உ. வ.). "ஆடினாள் பாடினாள்" (தனிப்பாடல்).

பாடு—பாட்டு = 1. பாடுகை. 2. இசைப்பாடல். 3. இன்னிசை. "கூத்தும் பாட்டும்" (மணி. 2 : 19). 4. செய்யுள். "பாட்டுரை நூலே" (தொல். செய். 78). 5. வசை மொழி. என்னிடம் பாட்டுக் கேட்க வேண்டுமா? (உ. வ.).

பாடு—பாடகன்=பாடுவோன். "பாடகர் பாணர் புகழக் கண்டு" (திருவாலவா. 55 : 3).

பாடகன்—பாடகி=பாடுபவள். (நாம. 183).

பாடகன்—பாடினி=பாணர் குலமகள். "மறம் பாடிய பாடினி யும்மே" (புறம். 11).

பாடு—பாடி=1. பாடுபவன். எ-டு: வலவன்பாடி. பாடுபவள். எ-டு: கூழுக்குப் பாடி. பாடுவது. எ-டு: வானம் பாடி. 2. பாடி யிரப்பெடுப்பவன்—வள்பாடி பரதேசி. (W).

பாண்—பாணி=1. இசைப்பாட்டு. (திவா.). "புறத் தொரு பாணியிற் பூங்கொடி மயங்கி" (சிலப். 8:44). 2. இன்னிசை (சங்கீதம்). "பாணியாழ" (சீவக. 1500). 3. இசையொலி. "கிணை நிலைப் பொருநர் வைகறைப் பாணியும்" (சிலப். 13:148). 4. இசையுறுப்பாகிய தாளம். "தண்ணுமைப் பாணி தளர்தர் தெழூஉக" (கலித். 102).

Poem என்னும் கிரேக்க ஆங்கிலச் சொல்லும், பண் செய்யுள் என்னும் இரு சொற்களை வேர்ச் சொற்பொருளில் ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது.

Gk. poema=*poiema* f. *poieo*, to make.

(தொடரும்)

---

**சகூ-ஆம் சிலம்பு எ-ஆம் பரலில் வெளிவந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட விளக்கத்தில் விடுபட்டுப்போன பெயர்கள் வருமாறு:**

**I கண்ணிய அறிவுரையாளர்**

*1. தமிழ்நாட்டரசு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் பண்டாரகர் (Dr) மு. கருணாநிதியார். 17. பாவலரேறு பெருஞ்சித்திரனார். 18. கவியோகி சுத்தானந்த பாரதியார். 19. திரு. அ இராகவன், திருநெல்வேலி. 20. திரு. சதாசிவம், கோவை. 21 தலைமகன் (cap). அசரியா, காட்டுப்பாடி விரிவு. 22. புலவர் மு. சேதுராமன், க இ., தலைமைத் தமிழாசிரியர், நத்தம். 23. பொதுநூலக இயக்குநர் திரு. வே. தில்லை நாயகம், எம். ஏ., டி.எல்.எஸ்.*

**II கண்ணியச் சொல்லுதவியாளர்**

*1. பெரும்புலவர் கி. வா. ஜெகநாதன், 'கலைமகள்' ஆசிரியர்.*

**III கண்ணிய விடையுதவியாளர்**

*16. பர். (Dr.) குருசாமி. 19. பேரா வி. இராச மாணிக்கனார், க. மு., இ. மு., பூ. சா. கோ. கல்லூரி, கோவை.*

---

# கம்பன் கண்ட கருந்தலைய குருகு

(Black Bittern)

[பி. எல். சாமி. பி. எஸ்ஸி.]

நற்றிணையில் 211ஆம் பாட்டில் கருங்கால் குருகு என்ருெரு நீர்ப்பறவை கூறப்பட்டுள்ளது.

"கொடுங்கழி மருங்கின் இரைவேட் டெழுந்த
கருங்கால் குருகின் கோளுய்ந்து போகிய
முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை
எறிதிரை தொகுத்த எக்கர் நெடுங்கோட்டுத்
துறுகடல் தலைய தோடுபொதி தாழை
வண்டுபடு வான்போது வெரூஉந்
துறைகெழு கொன்கன் துறந்தனன் எனவே."

வளைந்த கழியிடத்தில் கரிய காலையுடைய குருகின் குத்துக்குத் தப்பிப் பிழைத்தோடிய இறவு தாழையின் வெளிய பூவை நோக்கி இதுவுமொரு குருகுபோலுமென்று அஞ்சும் என்று கோட்டியூர் நல்லந்தையார் என்ற புலவர் கூறியுள்ளார். இந்தப் பாட்டில் குருகு என்பதற்கு உரையெழுதிய பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் குருகு நாரையின் பகுதியாகிய 'நெடலை, வக்கா முதலாயின. இவையே தாழம்பூ மோத்தை போலிருப்பன' என்று கூறினுர். நெடலை, வக்கா என்ற பெயர்கள் இன்றும் வழக்கிலுள்ளன. மோத்தை என்ற பெயர்வழக்கு காண்பதற்கில்லை. ஆனுல், கல்லாடத்தில் கூகையை மொத்தை யென்று கூறியிருப்பதைக் காணலாம்.

"பெரும்பக லிடையே பொதும்பரிற் பிரிந்த
வளைகட் கூருகிர்க் கூக்குரன் மொத்தையைக்
கருங்கட் கொடியினங் கண்ணறச் சூழ்ந்து
புகையுடல் புடைத்த விடவினை போல"

—கல்லாடம் 71:17-19.

பொதும்பைவிட்டு வந்த வளைகண்ணும் கூருகிரும் கூக்குரலும் உள்ள மொத்தையைக் கருங்கண்ணையுடைய காக்கையினம் கண்ணறச் சூழ்ந்து அதனுடைய புகை நிறத்தினையுடைய உடலைக் குத்திய செயலைக் கல்லாடம் கூறியுள்ளது. இங்கு மொத்தை யென்றது கூகையையே. மொத்தை என்ற பெயர் உடல் பருத்துக் காணப்படுவதால் வந்ததென்று தெரிகின்றது. உடல்பருத்த வெட்டுக்கிளியை 'மொத்தை' என்று அடை கொடுத்துக் கூறுவதை நான் கேட்டிருக்கின்றேன். மொத்தையும் மோத்தையும் ஒரே பொருள் தரும் சொற்களா என்பது

மேலும் ஆராய்தற்குரியது. சங்க நூல்களின் மரபைப் பின் பற்றித் தாழையின் பூவைக் குருகிற்கு ஒப்பிட்டுப் பிற்கால நூல்கள் கூறியுள்ளன.

குருகு என்ற பெயர் சங்க நூல்களில் கொய்யடிநாரை, வெள்ளைக்கொக்கு முதலிய பறவைகளுக்கு வழங்கிவந்துள்ளது. வெள்ளைக்கொக்கு சங்க நூல்களில் வெள்ளாங்குருகு, வெண் குருகு என்றழைக்கப்பட்டுள்ளது. இந்தப் பறவைகளுக்கு இனமான ஒருவகை நாரைகளைப் பறவை நூலார் Bitterns என்றழைப்பர். இந்தவகை நாரைகளை எளிதில் காணமுடியும். இந்த நாரைகள் கால்வாய்களிலும் கழிகளிலும் உள்ள தாழைப் புதரில் பெரும்பாலும் இயற்கையாகக் காணப்படும். பிற்கால நூல்களில் சிலவகைக் குருகுகள் தாழைப்புதரில் வாழ்வதாகக் கூறுவதைக் காணலாம். ‘தாழை வெண்பூக் குருகென மலரும்’ என்று குறுந்தொகை (226) கூறியுள்ளது.

“முருகுவாய் முட்டாழை நீண்முகை பார்ப்பென்றே
குருகுவாய்ப் பெய்திரை கொள்ளா - துருகிமிக
இன்னு வெயில்சிற கான்மறைக்குஞ் சேர்ப்ப! நீ”
மன்னு வரவு மற. —திணைமாலை நூற்றைம்பது, 36.

“கருங்கழி கொடுக்கும் வெள்ளிற வருந்தக்
கைபார்த் திருக்கு மடப்பெடைக் குருகே
பெடைக்குரு கணங்கின் விடுத்தவெண் சினையொடு
காவலடை கிடக்கும் கைதையம் பொழிலே”
—கல்லாடம், 23:6-9.

“சேவன்மண் டலித்துச் சினையடை கிடக்குங்
கைதைவெண் குருகெழ மொய்திரை யுகளு
முளைகடற் சேர்ப்ப னளிவிடந் தணிப்ப”
—கல்லாடம், 92:12-14.

“மீனுண வுள்ளி யிருந்தவெண் குருகெனச்
சோறுநறை கான்ற கைதைய மலரும்”
—கல்லாடம், 21:17-18.

“பிணர்முடத் தாழை விரிமலர் குருகென
நெடுங்கழிக் குறுங்கய னெய்தலுண் மறைந்தும்”
—கல்லாடம், 72:17-18.

“வெள்ளிற வுண்ண விழைந்துபுகு குருகினங்
கருங்கழி நெய்தலைக் காவல்செய் கண்ணென
அரவெயிற் றணிமுட் கைதையு ளடங்கியும்”
—கல்லாடம், 72:26-28

‘நெய்தற் குருகு தன் பிள்ளையென்றெண்ணி நெருங்கிச் சென்று கைதை மடல் புல்கு கழிப்பாலை’ (106-1) என்று அப்பர் கூறுகின்றார். வெண்குருகு தன் பெடையென்று கருதித் தாழை

வெண்மடலைப் புல்குவதாகச் சம்பந்தர் பாடியுள்ளார். தாழை யின் நீண்ட முகையைத் தன்னுடைய குஞ்சென்று குருகு கருதுவதாகத் திணைமாலை கூறுகின்றது. இந்த உவமைகளைப் பலரும் பயன்படுத்துவதற்குக் காரணம் ஓரினக் குருகுகள் தாழைமரச் சூழலில் பெரும்பாலும் காணப்பட்டதாலே யாகும். பறவை நூலறிஞர்களும் ஓரினத்தைச் சேர்ந்த சிலவகைக் குருகுகள் (Yellow bittern, Black bittern, Chestnut bittern) தாழைப்புதரில் கூடுகட்டுவதையும் பதுங்கியிருப்பதையும் கூறியுள்ளார்கள்.

இக் குருகுகள் Bittern இனத்தைச் சேர்ந்தவை யாகும். தாழையின் சூழ்நிலையிலேயே அடிக்கடி இந்தக் குருகுகள் காணப்பட்டதால் தாழை மடல் போலவும் தாழையின் பூமடல் பொதிந்த பூப்போலவும் இருந்தனவாக உவமிக்கப்பட்டன. கல்லாடத்தில் சோறுபோல மகரந்தம் உள்ள தாழம்பூ (ஆண் பூ) வெண்குருகுபோல மலர்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. மற்றும் குருகுகள் கைதையுள் அடங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. கருங்கழி ஓரம் கைதையம்பொழிலில் பெடைக்குருகு வெள்ளை முட்டையிட்டுக் காவல் காக்கும் என்றும் கல்லாடம் கூறுவதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்தக் கல்லாடப் பாடல்களில் காணும் செய்திகளை ஒத்துக் கம்பர் ஓர் அரிய இயற்கைச் செய்தியைக் கூறியுள்ளார்.

> "கருந்தகைய தண்சினைய கைதைமடல் காதல்
> தருந்தகைய போதுகிளை யிற்புடை தயங்கப்
> பெருந்தகைய பொற்சிறை யொடுக்கி யுடல்பேராது
> இருந்தது நின்பெடை பிரிந்தவர்க ளென்ன." —4-10-78.

கார்காலப் படலத்தில் கம்பர் இந்தப் பாடலைப் பாடி யுள்ளார். நீர் நிரம்பிய காலம். இக் காலத்தில் கைதை மடலில் சிறையொடுக்கி உடல் பேராது குருகின் பெடை இருந்ததாகக் கம்பர் கூறியுள்ள செய்தி மிக அரிய இயற்கைச் செய்தியாகும். கருங்குருகு கைதை மடலில் இருப்பதைக் கம்பர் கூறியுள்ளார். இந்தக் குருகு கரிய நிறமாயிருப்பதைக் 'கருந்தகைய' என்று கூறித் தெளிவாக இதன் நிறத்தைக் கூறி யுள்ளார். குளிர்ச்சியான முட்டைகளை விட்டிருந்ததைத் 'தண்சினைய' என்று கூறினர். கல்லாடத்தில் 'விடுத்த வெண் சினையொடு' என்று கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். 'காதல் தருந்தகையபோது கிளையிற் புடைதயங்க' என்று வரும் இப்பாட்டின் மூன்றாவது வரிக்கு ஆசையூட்டு மலர் புறவிதழ் களின் பக்கங்களோடு சூழ்ந்து விளங்க என்று பொருள் கூற வேண்டும். ஆனால் 'கிளையிற் புடை தயங்க' என்பதற்கு

நாரைக்குச் சுற்றம் விளங்க என்று பொருள் கொண்டு பல ஆசிரியர்கள் உரை கூறியிருப்பதைக் காணலாம்.

'கிளையிதழ்பறியா' என்று குறிஞ்சிப் பாட்டில் வருகின்ற இடத்தில் புறவிதழ் பறித்து என்று நச்சினர்க்கினியர் நுட்பமாகப் பொருள் கூறியிருப்பதைக் காணலாம். தாழை மலரின் 'புறவிதழ்' நன்ருக முழுவதும் திறக்காது சிறிது திறந்து பக்கங்களில் சூழ்ந்து இருந்த நிலையையே அழகிய சிறகுகளை யொடுக்கி உடல் பேராது இருந்த குருகின் பெடைபோல இருந்ததாகக் கம்பர் கூறினர். இந்த இடத்தில்தான் கம்பர் கூறும் உவமைநயம் மிகச் சிறப்பாக உள்ளது. அறிவியலுக்கும் இயற்கைக்கும் மிகப் பொருத்தமாக உள்ளது. ஒரு வகை நாரை எப்போதும் நீர் நிறைந்த கழிகள், கால்வாய்கள் ஓரங்களில் உள்ள செடிப்புதர்களில் வாழும். முக்கியமாகத் தாழைப் புதர்களில் வாழும். பகலில் பதுங்கியிருந்து மாலை வேளையில் உணவு தேட வெளிவரும். இந்த நாரைகளை பிட்டெர்ன் (Bittern) என்று பறவை நூலில் அழைப்பர்.

இவற்றில் மூன்று வகையை மஞ்சள்நாரை, தவிட்டு நாரை, கருப்புநாரை என்று பாமர மக்கள் அழைப்பர். இந்த மூன்று வகைகளில் கருப்பு நாரையையே கம்பர் கூறியுள்ளார். இந்தக் கருப்புநாரை பெரும்பாலும் கைதையம்பொழிலிலும் தாழைமரப் புதரிலும் காணப்படுவதால் மலையாளத்தில் 'கைதைக்கொக்கு' என்றழைத்தனர். அசாமி மொழியிலும் தாழைக் கொக்கு என்ற பொருளில் இதன் பெயர் வழங்குகின்றது. இந்த நாரை கருப்பு நிறமானது. கம்பரும் 'கருந்தகைய' என்று தெளிவாக இதன் நிறத்தைக் கூறியுள்ளார். கைதை மடலில் இருந்ததையும் கூறியுள்ளார். கைதையில் முட்டை யிட்டதையும் கூறியுள்ளார்.

இந்தக் கருத்த நாரைக்கும் இதன் இனமான 'பிட்டர்ன்' (Bittern) நீர்ப் பறவைகளுக்கும் ஓர் அரிய குணம் உண்டு என்று பறவை நூலார் கூறியுள்ளனர். ஆபத்துக் காலத்தில் அவை பறந்து செல்வதில்லை. அப்படியே ஆடாது அசையாது தங்களைச் சுற்றியுள்ள செடிகளின் இலைபோல, கிளைபோல, மடல்போல மாறிவிடும். மடல்போல உடலை நீட்டி வைத்து, அலகை மேல்நோக்கி நீட்டிக்கொண்டு சூழ்நிலையில் உள்ள செடி, மரம், செத்தைபோல மாறிவிடும். இந்தக் காரணத்தால் இந்தப் பறவையைச் சூழ்நிலையினின்று பிரித்துக் கண்டுபிடிப்பது எளிதன்று. (All the Bitterns are tawny brownish birds - blackish birds - their soft feathers richly sheathed and speckled to resemble the reeds in which they

live. Bitterns depend on their camouflage instead of flight when danger threatens. They have an uncanny knack of freezing into reed-like pose with body and bill pointed skyward. This blends into their surroundings. The bittern seems to know which side of its body is most concealingly coloured and will turn slowly to keep its striped front facing the intruder. In a windy day they will even sway slightly as if with the breeze.) இந்த நாரைகள் சூழ்நிலையைப் போலிருப்பதுடன் தம்முடைய உடலின் எந்தப் பக்கத்தைத் திருப்பிக் காட்டிச் சூழலில் உள்ள செடிபோல இருந்து மறைந்து கொள்ளலாம் என்பதை உணர்ந்து அந்தப் பக்கத்தையே காட்டும் திறமும் உடையது. மற்றும் ஆடாது அசையாது இருந்து காற்றில் கிளை ஆடும்போது தானும் கிளைபோலவே அசைந்து கொடுக்கும் என்று ஒரு பறவை நூலாசிரியர் கூர்ந்து கவனித்து எழுதியுள்ளார்.

இச் செய்தியைத் தெரிந்தே 'சிறையொடுக்கி உடல் பேராது இருந்த குருகின் பெடை' என்று கம்பர் கூறியிருப்பதைக் காணும்போது போற்ருமல் இருக்க முடியாது. குறுந்தொகையிலேயே (228) தாழைமடல் போலக் குருகின் சிறகு இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. சங்கநூல்களிலும் தேவாரத்திலும் கல்லாடத்திலும் தாழையில் குருகு தங்குவதைக் கூறியுள்ளனர். இந்தக் குருகுகள் மற்ற நாரையினங்கள்போலக் கூட்டமாக இரா. இவற்றிலும் கருப்புநாரை ஆணும் பெண்ணுமாகவே இருக்கும் என்பர். ஆணும் பெண்ணுமாக இருப்பதைக் கம்பர் கூறியுள்ளதையும் காணலாம். இந்தக் கருப்புநாரையை மழைக்காலத்தில்தான் பார்க்க முடியும் என்றும் மழைக்காலத்தில்தான் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் என்றும் பறவைநூலார் கூறியுள்ளனர். கம்பரும் கார்காலப் படலத்தில்தான் இந்த நாரையைப்பற்றிக் கூறியுள்ளார். கருப்புநாரை கடற்கரைக் கழியில் காணப்படாது உள்நாட்டில் காணப்படும் என்று கூறுவர். கம்பர் கருப்பு நாரையைப் பற்றிச் சொன்ன செய்திகளும் அதன் இயற்கைச் செய்திகளுடன் முற்றிலும் ஒத்தே காணப்படுகின்றன. இந்தக் கருப்பு நாரையைத் தாழைப்புதரில் வாழ்வதால் கைதைக்கொக்கு என்று மலையாளத்தில் மிகவும் பொருத்தமாகக் கூறினர். கம்பரும் தெளிவாகக் 'கருந்தகைய'—'கைதைமடல்' குருகாகக் கூறியுள்ளதைக் கவனித்து நாம் நினைத்து இன்புறலாம். கம்பர் கூறிய கருந்தகைய குருகு பறவை நூலில் Black Bittern என்றழைக்கப்படும்.

———

# அடிகளார் அருந்திறம்

[புலவர் இரா. இளங்குமரன்]

சிலம்பு+அதிகாரம்—சிலப்பதிகாரம். 'சிலம்பு' என்பது 'சிலப்பு' என வலித்தல் வேறுபாடு பெற்றது! 'சிலம்பதிகாரம்' என்றே பெயர் சூட்டி இருக்கலாம். 'வலித்தல் வேறுபாடு பெற்றது' என்று இலக்கணம் கூறுவதற்காகவா அடிகளார் சிலப்பதிகாரப் பெயர் சூட்டினர்? எடுத்த எடுப்பிலேயா-நூற் பெயரிலேயா-இந்த வேற்றுமை விளையாட்டு?

'வரம்பு' என்பது 'வரப்பு' என வலித்தல் வேறுபாடு உற்றுத் தனிச் சொல்லாகவே அமைந்து போயிற்றே. 'குரங்கு' என்பது 'குரக்கு' எனத் தனிச் சொல்லாகவும் ஆயிற்றே. 'சிலம்பு' அவ்வாறு 'சிலப்பு' என எவ்விடத்திலேனும்-சிலப் பதிகாரம் மட்டுமின்றி எவ்விலக்கியத்திலேனும் வழக்கிலேனும்-வழங்கப் பெற்றதுண்டா? வழக்கில் இல்லாச் சொல்லைக் 'கரும்பு ஆட்டிக் கட்டி கொண்டார் போலச்' சூட்ட வேண்டுமா?

சிலம்பு என்னும் சொல் மெல்லொலியுடையது. அவ் வொலிபட இயலுதலாலேயே அப்பெயர் பெற்றது. பல்வேறு ஒலிகளுக்கும் இடம் ஆகியதும் எதிரொலி எழுப்புவதும் ஆகிய மலை சிலம்பு எனப் பெறுவதும், கோலொடு கோல் மோதுண்டு ஒலியெழுப்பும் ஒருவகை வீர விளையாட்டு 'சிலம்பு', 'சிலம்பம்' 'சிலம்பாட்டம்' எனப் பெறுவதும் நினைவு கூரத்தக்கன.

சிலம்பு ஒலிப் பொருட்டதா தலைத்,

"தினைச்சி லம்புவ தீஞ்சொல் இளங்கிளி
நனைச்சி லம்புவ நாகிள வண்டுபூம்
புனைச்சி லம்புவ புள்ளினம்; வள்ளியோர்
மனைச்சி லம்புவ மங்கல வள்ளையே" (கம்ப. பால. நாட்டு. 62)

என்னும் கம்பர் வாக்கால் அறியலாம்.

இனிச் சிலம்பை நோக்குவோம்.

திருமணத்திற்கு முன்நிகழ்ச்சியாக நிகழ்த்தப்பெறுவது சிலம்பு கழி நோன்பு. அந் நோன்பு நிகழ்த்தப் பெற்ற பின்னரே 'வதுவை' விழா நிகழும். ஆனல், கண்ணகியாரின் வதுவை விழா ஊரவர் அறிய அரசு விழை விழாவாக நிகழ்ந்ததை அன்றிச் சிலம்புகழி நோன்பு நிகழ்ந்ததையே அறியோமே! அதனைக் கூற்ருல் அன்றிக் குறிப்பால் கூட அடிகளார் அறிவித்திலரே! அது நிகழ்ந்திருந்தால் அன்ருே அறிவித்திருப்பார் அடிகளார்?

பண்டு தொடங்கி வந்த அவ்வழக்கம் கண்ணகியார் திருமண விழாவில் போற்றப் பெறவில்லை. அவர் சிலம் புடனேயே மணக்கோலம் கொண்டார்; மனையறமும் நடாத்

தினர்; மாதவியார் மனையை நாடிக் கோவலன் பிரிந்த கொடுந் துயர்க் காலையில் தான் சிலம்பினைக் கழற்றினர். இதனை,

> "அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய"

என்கிறார் அடிகளார். ஆகக், காலங்கடந்தும், காலில் அணி செய்த சிலம்பு கண்ணீர் இடையே கழற்றி வைக்கப் பெற்றது. எவ்வளவு மகிழ்வுடன் ஊரும் உறவும் உவக்க விழாக் கோலத் தோடு கழற்ற வேண்டிய சிலம்பு? வாய்விட்டுச் சொல்லவும் முடியாமல், வன்மையாகத் தாங்கிக் கொள்ளவும் முடியாமல் இருக்கும் அலக்கண் மிக்க பொழுதிலே யாரும் அறியாமல், "இன்ப நினைவை இடையருமல் எழுப்பிக் கொண்டு இன்னல் செய்யும் இச் சிலம்பு ஒழிக" என்று கழற்றி எறிய வேண்டிய இடர்ப்பாட்டுக்கு ஆட்பட வேண்டுமா? சிலம்பின் ஊழ்போலும் அது. அல்லது 'பொருதகர் போலத் தாக்கற்குப் பேரும் தகைத்துப்' போலும்!

மாதவியாரைப் பிரிந்த கோவலன் கண்ணகியாரை மீண்டும் அடைந்தான். "குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைத்த, இலம்பாடு நாணுத் தரும்" என்றான். கண்ணகி யாரிடம் பொன்னையோ பொருளையோ கேட்டானா? "நான் இருக்கிறேன்" என்று நாவில் முந்து நிற்கின்றதே சிலம்பு! எத்தகைய வன்கொடுமை இது? அழகு விழாவை அழித்து அழுகையிடையே கழற்றிய பழிக்குப் பழி வாங்கிக் கொள்ள முடிவு கொண்டு விட்டதோ சூழ்வினைச் சிலம்பு?

கண்ணகியாரிடம் வேறு அணிகலங்கள் இல்லையோ? 'இல்லை' என்று எவர் உரைத்தார்? அடிகளார் உரைத்தாரா? அவர் உரையே உரை! அவர் என்ன உரைத்தார்? கண்ணகியா ரிடம் சிலம்பு மட்டுமென்ன, இடையணியாம் மேகலை, காதணி யாம் குழை இன்னபிறவும் உளவே!

> "அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய
> மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
> கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்
> மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்
> கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்"

என்பதன்றே அடிகள் வாக்கு? அணிகள் பலவும் இருந்தன. கண்ணகியார் தாம் "மங்கல அணியிற் பிறிதணி மகிழார்." தலையணி, இடையணி முதலாயவை அடங்கிக் கிடக்க இக் காலணிக்கு என்ன வந்தது முந்து நிற்க வேண்டிய செருக்கு?

கண்ணகியார் சிலம்பு விலைமதித்தற்கரியது. வேலைப் பாடும் ஒப்பற்றது. பேரரசச் செல்வம் பெற்றார்க் கன்றிப் பிறர் செய்து கோடற்கு இயலாதது. ஆதலால் விலைமானச் சிலம்பு

தலை நீட்டுகின்றது. "இலம்பாடா? நானிருக்க இலம்பாடு நுமக்கு ஏது?" என்று உணர்த்துகின்றது! கண்ணகியார் நாவின்வழி ஒலிக்கின்றது.

சிலம்பின் விலைமானத்தை எவ்வாறு அறியலாம்?

தென்னவன் பெயரிய பொன்வினைக் கொல்லனைக் கண்டு கோவலன், "காவலன் தேவிக்கு ஆவதோர் காலணி நீ விலை இடுதற்கு அறிதியோ?" என்று வினவுகின்றானே! "கோப் பெருந்தேவிக்கு அல்லதை இச் சிலம்பு யாப்புறவு இல்லை" என்று விளம்புகின்றானே பொற்கொல்லன், ஆம்! சிலம்பின் மதிப்பு அத்தகையது!

"மத்தக மணியொடு வயிரம் கட்டிய
பத்திக் கேவணப் பசும்பொன் குடைச்சூல்
சித்திரச் சிலம்பின் செய்வினை எல்லாம்"

செவ்விதின் நோக்கி யன்றோ பொற்கொல்லன்:

"கோப்பெருந்தேவிக்கு அல்லது யாப்புறவில்லை"

என்று கூறுகின்றான். இவை காட்டுவது என்ன? விலை மதிப் பிடற்கு அரிய சிலம்பு என்பது தானே! அதன் விலை மதிப்பு என்ன வேலை செய்கின்றது? ஒற்றைச் சிலம்பைக் கொண்டு போய் மாறிவர விரைவாக ஓட்டுகின்றதே!

கண்ணகியார் தெளிவாகச் சொல்கிறார். "சிலம்புள கொண்ம்"; இரண்டு சிலம்புகளையும் மறக்காமல் சொல்கிறார். கொடுப்பவர் இரண்டையும் கொடுக்க முந்துகின்றார். பெற்றுக் கொள்பவனோ, சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டு யான்போய் மாறிவருவன் என்கிறான். கொடுப்பவர் கூற்றுக்கும் கொள்பவர் கூற்றுக்கும் அம்மம்ம! எத்தகைய முரண்! சித்திரச் சிலம்பு செய்வினை போலும்!

அணிகலங்கள் இருவகைய. அவை: ஆழி, வடம் முதலான ஒற்றை அணிகலம் ஒருவகை; சிலம்பு, குழை முதலான இரட்டை அணிகலம் மற்றொரு வகை. இரட்டை அணிகள் 'இரட்டைக் கிளவி' போல்வன. அவற்றைத் தனித்து வாங்குவதோ, விற்பதோ, அணிவதோ இல்லை. இணைபிரியா அணிச் சிலம்பை இணைபிரித்து விற்கும் வழக்கு சிலப்பதிகாரக் கோவலனிடத்து அன்றி, எவரிடத்தேனும் கண்டதும் கேட்டதும் உண்டோ?

இருக்கட்டும்: விற்பவன்தான் ஒற்றைச் சிலம்பைக் கொண்டு சென்றான். மன்னவன் மாபெரும் தேவியின் மலரடிச் சிலம்பைத் திருடியவனுக்கு என்ன பேரருள் பெருநெஞ்சம் வந்துவிட்டது, ஒற்றைச் சிலம்பையே திருடுதற்கு! இரண்டாகத்

திருடினுல் அன்ருே விற்கவோ, அணியச் செய்யவோ கூடும்? அரசமாதேவியின் சிலம்பு செய்யும் வினையோ இது!

போகட்டும் :

கண்ணகியார் சிலம்பு, சோணுட்டுக் காவிரிப் பூம்பட்டினக் கம்மியர் செய்தது. பாண்டிமா தேவியின் சிலம்பு மாடமதுரை மாண்வினைக் கொல்லராற் செய்யப் பெற்றது. இரண்டும் எப்படி ஒன்றை ஒன்று வேற்றுமை காண ஒண்ணு வண்ணம் அமைந்து விட்டன. அதிலும் அணியும் அரசமா தேவியுமா ஐயுரு வண்ணம் அமைந்த ஒத்த வேலைப்பாடு! விந்தையினும் விந்தை, மகளிர் தம் அணிகலமே என்று அயிர்ப்பின்றிக் கொள்ளுமாறு பிறிதோர் அணிகலத்தைச் செய்வது!

வளையலை எக் கைக்கும் மாற்றிப் போடலாம். குழையை மாற்றிப் போடலாம் எச் செவிக்கும்! வேற்றுமை இல்லை. சிலம்பு அத்தகையதா? வலக்காற் சிலம்பு இடக்காற்கு ஆகுமா? இடக்காற் சிலம்பு வலக்காற்கு ஒவ்வுமா? பாண்டி மாதேவியின் எக்காற் சிலம்பு களவு போயதோ, அக்காற் சிலம்பேயா விலைக்கு வரவேண்டும்? திட்டமிட்டுச் செய்தாற் கூட இவ்வளவு திறமாகச் செய்தற்கு இயலாதே!

சிலம்பின் இத் திருவிளையாடலுக்குத் துணை நின்றனவே கண்ணகியார் சீறடிகள். ஆம்! கண்ணகியாரின் அஞ்செஞ்சீறடி (4 : 47) இணை மலர்ச்சீறடி (12 : 45) சீறடி (13 : 4; 16 : 92) வண்ணச் சீறடி (15 : 138) என்பவை. இச் சீறடிகள் கோப் பெருந்தேவியாரின் சீறடிகளோடு ஒப்ப இருந்தமையால்தாமே சிலம்புகள் ஒத்த அளவாய் அமைந்தன. அவிழ்க்க முடியாத வினைமுடிச்சு இது!

நிகழாத வெல்லாம் நிகழ்கின்றன. களவினை 'உள்ளத்தால் உள்ளவும்' செய்யாத கோவலனைக் கள்வனுக்கி வைத்த சிலம்பு—தன்னைக் கவர்ந்துகொண்ட காவலனை வாழுமாறு விட்டு வைத்ததா? அரசியை அணியுமாறு விட்டு வைத்ததா? தானுவது வாழ்ந்ததா? தன் இணைச் சிலம்பையாவது இருக்க விட்டதா? இணைச் சிலம்பை என்ன? அடைக்கலம் அருளிய ஆயர் முதுமகள் மாதரியை, வழித்துணை புரிந்த பழிப்பருந் துறவி காவுந்தி ஐயையை, பூம்புகாரில் இருந்த கோவலன் கண்ணகியர் தாயரை உயிரோடு இருக்க விட்டதா?

மென்சிலம்பு செய்யும் செயல்களா இவை? அச் சிலம்பின் வன்கொடுமையைப் பறைசாற்ற வழி என்ன? அதன் பெயரிலேயே வன்மையை ஏற்றிவிடுவது சரியான வழியல்லவா? குற்றத்தை எழுதி நெற்றியிலேயே ஒட்டி வைத்தது போன்ற செயல் சிலப்பதிகாரப் பெயர் சூட்டு! அடிகளார் அளப்பரும் திறம் இதுவாகும்.

# திருமறைத் திறம்

[குருகுலம் அழகரடிகள்]

திருக்குறள் மறை என்னுந் திருமறை மாந்தர் அறிய வேண்டிய வாழ்க்கை யுண்மைகளை மட்டும் தொகுத்துச் சொல்லுகிறது. அப் பொதுமறையின் ஆசிரியர், தம்மைப் பற்றியோ மற்றவரைப் பற்றியோ தமது நூலில் ஒரு குறிப்பும் கூறவில்லை.

ஓர் அரசர் பெயரோ, ஒரு நாட்டின் குறிப்போ, ஒரு சமயத்தின் விளக்கமோ, ஒரு மொழியின் வல்லமையோ, ஒரு காலத்தின் செய்தியோ, அப் பெரு நூலில் தினைத்தனையும் இல்லை. கதைகள், வரலாறுகள், எவையும் இல்லை.

இவ்வளவு பொதுமையாக அந்நூல் வழங்கப்பட்டிருந் ததனாலேதான் அஃது, உலகப் பொதுமறை ஆயிற்று. நிறை மொழியாயிருப்பதனால் மறையாயிற்று. உலக மாந்தரிடத் திலும் சிற்றுயிர்களிடத்திலும் வைத்த கருணையும் உருக்கமுமே நூல் இவ்வாறு உருவாவதற்குக் காரணம். குறைந்த வாழ் நாளில் இடர் மிகுந்த உலக வாழ்க்கையில் சுருக்கமாக அறிவதை நினைந்து குறள் வடிவில் செய்யுள் வகையில் நூலை அவர் இயற்றினார். அஃது உலகுக்கு வேதமாகிவிட்டது.

நூல் என்றால் அஃது ஏதாவது ஒரு மொழியில் வெளிப் படுவது இன்றியமையாதது. திருக்குறளாசிரியர் தம் தாய் மொழியாகிய தமிழில் அதனை வெளிப்படுத்த வேண்டிய கட்டாய முடையவரானார். அந்நிலையில், தமிழின் திறனெல்லாம் இணையற்ற பெரும்புலமையுடன் நன்கு வெளிப்பட்டன. நூல் முழுமையும், தமிழ் தமிழாகவே உள்ளது. சில சொற்கள், தொடர்கள், வழக்குகள், குறிப்புகள் இங்கே கருதத் தகும்.

**ஆதிபகவன் :**

இது, முதல் குறளில் வருகின்றது. முழுமுதற் கடவுளைக் குறிக்கின்றது. 'மாது ஒரு பாகன்' என்னும் சொற்பொரு ளுடையது; அம்மையப்பராக முதற் கடவுளை அறிவிக்கிறது. 'ஆதி' என்பது 'இவ்வாறு ஆகுக' என அம்மையின் ஆக்குந் திறத்தை வெளிப்படுத்துகின்றது. பகவன்—கூறன்; பகு, பகவு, பாகம், பகவன் என்னும் சொற் காரணர்கள் நினைவு கூர்தற்குரியன,

**உலகு :**

கூழாங் கற்களைப்போல இயற்கையாகவே உருண்டு உருண்டு ஓரளவு வட்ட வடிவு பெற்றது உலகம் :

**குணம் :**

இச் சொல், முதல் அதிகாரத்தில் ஒன்பதாவது குறளில் வருகின்றது; 'குணக்கு' என்னும் ஒரு சொல் 'கிழக்கு' என்னும் திசைப் பொருளில் தமிழில் வரும்; 'கிழக்காம் தலை' என்னு மிடத்தில் (திருக்குறள், 488) கிழக்கு என்பது கீழ் என்னுங் கருத்தில் வருகின்றது. 'குணம்', தம் நிலைக்குக் கீழ்நிலையில் உள்ள மக்களிடமும் சிற்றுயிர்களிடமும், செயலிற் காட்டும் ஆதரவுப் பண்பைக் குறிக்கும்; 'கீழோ ராயினும் தாழ உரை' என்னும் இனிய முறைமை இது! 'உரை' என்றது கொண்டு 'நினை' 'செய்' எனவும் யாரும் அறிந்து கொள்ளலாம்.

**பூசனை :**

'வான் சிறப்பு' என்னும் இரண்டாம் அதிகாரத்தில் எட்டாவது குறளில் இச் சொல் உள்ளது.

பூசுதல் என்பது கழுவுதலாதலின் திருமுழுக் காட்டுதலை முதன்மையாக இது குறிக்கும். அது முதலாக, ஆடை சாத்துதல், சாந்து அணிவித்தல், மலர் சூட்டுதல், படையல் அமைத்தல், ஒளிகாட்டுதல், இசைமிழற்றுதல் முதலிய செய்கை களையும் இச் சொல் உணர்த்தும்.

அருவமுங் கடந்த ஒரு பொருளை, உருவிற் பதித்து அன்பு புலப்படுத்தி உருக்கம் மிகுவதற்குப் பூசனை இன்றியமையாதது.

**தானம் :**

தன்முனைப்புக் கெடுவதற்குப் பெரியோர் இவ்வாறு 'தக்கோர்க்கு வழங்குதலை' ஒரு வழியாகக் கண்டனர். 'தன் முனைப்பு' என்னுந் தன்மை எழுச்சி அறும்படி வாழ்வது, தூய வாழ்க்கை; தக்கோர்க்குத் தகுதியறிந்து வழங்குந் 'தானத்'தால் இஃது அமைகின்றது.

**தவம் :**

'தபம்' என்பதும் 'தவம்' என்பதும் ஒன்று; 'தபு' என்னும் பகுதி தொல்காப்பியத்திலும் வரும்; தபுத்தல் - அடக்குதல்; தகாத நிலைகளில் புலனடக்கி வாழ்தலைத் 'தவம்' என்பர் பெரியோர்.

**பனுவல் :**

பலவாகப் பன்னிப் பன்னிக் கருத்துகளை ஒருமுறையோடு விளக்கும் நூல்களை இப்பெயர் குறிக்கும்.

**வையம் :**

ஓர் இயற்கை வல்லமை வைத்தது வையம் என்னும் உலகம்.

**வரன் :**

வரக்கூடியது வரம்; சேருந் திருவை ஈதுணர்த்தும்; மரம் மரன் எனப்படுவது போல வரம் வரன் என வந்தது; மரன் வரன் என்பனவே முதல் வழக்கு. அவை பின்பு னகரம் மகர மாகி மரம் வரம் என வந்தன; அழன் புழன் முதலிய வழக்குகள் இங்கு நினைவுகூரப்படும்.

**இந்திரனே :**

மழையே என்பது இதன்பொருள்; இந்திரன் மழை பெய்விக்குந் தேவன். முன்பெல்லாம் மழைக்காகச் செய்யப் படும் விழா 'இந்திர விழா' என்று வழங்கப்பட்டு வந்தது; மேகத்தில் தோன்றும் பலநிறமான வில் வளைவு 'இந்திர வில்' என்றுங் கூறப்படும்.

ஒரு முழுமுதற் கடவுளின் ஆட்சி, உயிர்களில் ஒவ்வொரு வகையான பக்குவம் அமைந்தவற்றைத் தேவராக்கிப் பல பணிகளில் துணைக்கு இருத்திக் கொள்ளும்.

அறியாமைப் பொருள்கள் தாமே அசையா; ஒவ்வொன்றை யும் அசைவித்து நடத்துவதற்கு ஒவ்வொரு தேவனுக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. மண்ணை அசைப்பதற்குப் 'பூதேவி' எனவும், விளையுள்களைப் பெருக்குவதற்குச் 'சீதேவி' எனவும், நீரை இயக்குவதற்குக் 'கங்கையம்மன்' எனவும், தீயை இயைப்பதற்குத் 'தீக்கடவுள்' எனவும், மழையைப் பெய்விப்பதற்கு 'இந்திரன்' எனவும், நோயை விளைப்பதற்கு 'நமன்' எனவும் இங்ஙனமெல்லாம் அவ்வவற்றின் வன்மை மென்மைகளுக்கு ஏற்ப ஆண் பெண் தேவர்கள் அமைந்து இயக்கி வருகின்றனர்.

இத் தேவர்கள் அனைவரும் ஒரு முதற் கடவுள் கருத்தின் வழி ஒன்றி நடப்பவர்கள்; ஆதலால், ஒரு முழுமுதற் கடவுளை வழிபட்டு வந்தால், எல்லாரும் இணக்கமாகவும், உதவி

யாகவுமே இருப்பர்; அவரவர்க்காகத் தனித்தனி வழிபாடு செய்வதும், அம் முதற்கடவுளை நினைந்து செய்வதே; முதல்வனுக்கு இவரெல்லாம் சூழலில் உள்ளவர்கள், இங்ஙனம் அமைந்த பெரிய கோவில்களே ஆங்காங்குக் காணப்படும் ஈசன் (தலைவன்) கோவில்கள் !

**மனம் :**

மன் இதன் பகுதி; இதனடியாக மனிதர், மானவர், மன்பதை முதலிய பெயர்கள் பிறக்கும். ஒரு நிலையில் நிலைத்தற்குரியது 'மனம்' எனப்படும். 'மன் மனம்' எனவும் அது கூறப்படும்.

உலகத்தில் மனத்தின் முனைப்பே எங்குங் காணப்படு தலால் 'முன்னம்' 'முன்னுதல்' என்பனவெல்லாம் நினைவின் குறிப்புகளாக வழக்குறும். முன்னுதலால் மன்னுதலை விளைப்பது மனம். முன்னுதல் முன் வந்து நினைத்தல்; மன்னுதல் - அதனால் நிலைபெறுதல்.

**ஆகுலம் :**

ஆரவாரம் என்னுங் கருத்தில் இச் சொல் வழங்கும். புறத்தே ஆகுதலாதலின் 'ஆகுலம்' எனப்பட்டது.

திருமறைக்குரவர், முதல் நான்கு அதிகாரங்களாகிய பாயிரத்தில் தமிழ்ச் சொற்களை இங்ஙனமெல்லாம் தக்க பொருள் முறைகளிற் கையாளுகின்றார். ஆழ்ந்து கற்பார்க்கு இவை யெல்லாம் தமிழ்ச் சுவைபெருக்கி நலங்கூட்டும்.

---

## திருவருள்பெற வழி

"ஆறறிவுடைய மக்கட் பிறவியெடுத்த உயிர்கள் தாம் பெற்ற இவ்அரிய பிறவிலேயே விரைந்து தாயராய் இறைவன் திருவருளின்பத்தைப் பெறுதற்கு இன்றியமையாது செயற் பாலன : தம் மனமொழி மெய்கள் ஒன்றினொன்று முரணுமல் தமக்கும் பிறர்க்கும் பிறவுயிர்க்கும் நலம் பயப்பனவற்றையே ஒருமுகமாய் நாடி நிற்குமாறு பழகுதலும், துன்பத்திற்கிட னின்றி இன்பத்தையே ஓயாது தருங் கல்வி கேள்விகளிலும், தவ முயற்சியிலுந் தமது அறிவை நிலைப்பித்தலும், இறை வன்றன் பேரருட்டிறத்தை நினைந்து நினைந்துருகுதலும் ஆமென்பதூஉந் தமிழ்ப் பேரறிஞர் கண்டறிந்த தாகும்."

**மறைமலையடிகள்**

(மறைமலையடிகளார் உரைமணிக் கோவை பக். 141)

# 'திருக்குறள் தந்த திருவள்ளுவர்'

[என். கே. வேலன், பி.ஏ.]

'திருக்குறள் தந்த திருவள்ளுவர்' என்ற நாட்டிய நாடகம் மயிலை ''இரசிகரஞ்சினி' அவைக்கூடத்தில் 1975 எப்ரல் நான்காம் நாள் மாலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள், உயர்நீதி மன்ற நடுவர் கோகுலகிருட்டிணன், கவிஞர் எஸ். டி. சுந்தரம் ஆகியோர் நடிகர்களைப் பாராட்டிப் பேசினர். கலை மாமணிகள் நடராசர்—சகுந்தலைக் குழுவினர் மிகவும் திறமை யுடன் நடித்துக் காண்பித்தனர். ஆயினும் கதையில் காணப் படும் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டியது நமது கடமை யாகின்றது.

நாடகத்தில் திருவள்ளுவரின் பிறப்பு பின்வருமாறு காட்டப்படுகின்றது :

வேதியர் ஒருவர் தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணை அழைத்து வருகின்றார். அப் பெண்ணுக்குப் பேறு காலமாக இருக்கின்றது. வேதியர் தமது மேலாடையை எடுத்துத் திரைபோல் மறைத்துக் கட்டுகின்றார். சாலை யோரத்தில் குழந்தை பிறக்கின்றது. குழந்தையை அந்த இடத்திலேயே போட்டுவிட்டுத் தம்முடன் வரும்படி வேதியர் அழைக்கின்றார். பெற்ற மனம் தவிக்கின்றது. வேதியர் அவளை வற்புறுத்தி இழுத்துச் செல்கின்றார். இஃது ஒரு கற்பனைக் கதையாகும். திருவள்ளுவர் பகவன் என்ற வேதி யருக்கும் ஆதி என்ற பறைச் சாதிப் பெண்ணுக்கும் புதல்வ ராகத் தோன்றினார் என்றும், தாய் தந்தையரின் பெயர்களை,

"ஆதிபகவன் முதற்றே உலகு"

என முதற் குறளில் வைத்துப் போற்றுகின்றார் என்றும் ஒரு கதை வழங்குகின்றது. இதுவே நாடகத்தில் முதற் காட்சி யாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

திருவள்ளுவர் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு களுக்குமுன் இருந்தவர். கடைச்சங்க காலத்தில் அவர் இயற்றிய திருக்குறள் அரங்கேற்றம் செய்யப்பட்டது. நமது தவக்குறைவால் திருவள்ளுவருடைய வரலாறு முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லை. ''வள்ளுவர்'' என்பது இயற்பெயர் எனப் பழைய உரையாசிரியர்கள் கூறுகின்றனர். அரசர்க் குரிய கருமத் தலைவரே 'வள்ளுவர்' ஆவார் என ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றனர்.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

எனத் திருவள்ளுவரே கூறுகின்றார். பிறப்பினால் உயர்வு

தாழ்வு கற்பித்தல் இக் காலத்திற்குப் பொருந்தாது என்பதை மனத்தில் வைத்து அதற்கேற்றபடி காட்சிகளை மாற்றியமைக்க வேண்டும்.

அனாதையாக இருந்த திருவள்ளுவரை ஒரு நெசவுக்காரர் எடுத்து வளர்க்கின்றார். இளம் வயதில் வளர்ப்புத் தாய் தந்தையருக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு வெளியேறுவதாகக் காட்டப்படுகின்றது. நன்றி மறந்தவராகக் காட்டுவது அவருடைய பெருமைக்கு இழுக்காகும். நெசவுத் தொழிலில் ஈடு பட்டிருந்தார் என்பதைக் காட்டுவதற்கு மற்றொரு கற்பனைக் கதை புகுத்தப்பட்டிருக்கின்றது.

அனாதையாக அலைந்துகொண்டிருந்த திருவள்ளுவரை ஔவையார் திருமூலரிடம் கொண்டுபோய்ச் சேர்க்கின்றார். திருமூலரிடம் கற்றுத் தேர்ந்து திருக்குறள் பாடியதாகக் காட்டப்படுகின்றது. திருவள்ளுவரும் திருமூலரும் ஒரே காலத்தவர் என்பதற்கு ஆதாரமில்லை. தமிழக முதல்வரும் இதனைத் தமது உரையில் சுட்டிக் காண்பித்தார்கள்.

பின்னர்த் திருவள்ளுவர் வேளாண் குலத்தைச் சேர்ந்த வாசுகி அம்மையாரை மணம் செய்துகொள்கின்றார். திருமணக் காட்சியில் நாட்டாண்மைக்காரன் ஒருவன் வந்து கூச்சலிடு கின்றான். குலம் கோத்திரம் தெரியாத திருவள்ளுவருக்குப் பெண் கொடுக்கக்கூடாதென்று தடைசெய்கின்றான். இக் காட்சியிலும் திருவள்ளுவருடைய குலத்தைப்பற்றி இரண்டாவது முறையாக வாக்குவாதம் செய்யப்படுகின்றது. வாசுகியம்மையாரின் தந்தையார் மார்க்கசகாயர் உறுதியுடன் நின்று திருமணத்தை முடித்து வைக்கின்றார்.

திருவள்ளுவர் உலகப் புகழ்பெற்ற உத்தமர். ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு'' எனப் பாரதியார் பெருமையுடன் பாடுகின்றார். திருவள்ளுவரின் பெருமைக்குக் களங்கம் வராமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கதையில் வரும் கற்பனைக் காட்சிகளை மாற்றி அமைத்து இரண்டு மூன்று திருத்தங்கள் செய்தால் நாடகம் இன்னும் சிறப்பாக அமைந்துவிடும். இதற்கு மாநில அரசும் மத்திய அரசும் ஆதரவளித்திருப்பதாக நாடக அரங்கில் அறிவிக்கப் பட்டது. இந்த நாடகம் நமது நாடு மட்டுமன்றி வெளிநாடுகளிலும் நடத்தப்படலாம்.

---

குறிப்பு: திருவள்ளுவர் பிறப்புக்கு இழிவு கற்பிக்க வேண்டுமென்பதே இந் நாடகத்தை உருவாக்கியவரின் நோக்கம் என்பது தெளிவாகின்றது. அதனால் தமிழ் மக்கள் விழிப்புணர்ச்சியோடு தடைசெய்தல் வேண்டும்.

# இறைவிப்பித்தன் காவியம்
அல்லது
# அபிராமிபட்டர் புராணம்
[ஆசிரியர் 'அடியன் மணிவாசகன்']

(முன் இதழ் ௪௦௨ ஆம் பக்கத் தொடர்ச்சி)

16. செந்தமிழைச் சீர்நாட்டைக் காத்தல் வேண்டிச்
செத்திடவும் தயங்காதே இந்த மண்ணில்
செந்தழலில் குளித்திட்டார் அம்மோ! வையம்
சேர்ந்தழவே உயிர்விட்டார் தமிழர் தாமே!
இந்தநிலைத் தொண்டுலகில் எங்கே கண்டோம்?
ஈடில்லா வழிகாட்டிச் சென்றார் அந்த
முந்தையரின் கொள்கையினை மூடி வைக்க
முடியாதே உலகந்தான் கண்ட நாடு.

17. கருகிவரும் பச்சையினைக் கண்டால் நெஞ்சம்
கருகிவிடும் வடலூரார் பிறந்த நாட்டில்
பெருகிவரும் காவிரியும் பொருநை வையை
பெண்ணையும்நற் பாலாறும் சிறந்த நாட்டில்
உருகிவரும் தெய்வடியார் உயர்ந்து வந்தே
ஓதுகின்ற நெஞ்சங்கள் திறந்த நாட்டில்
முருகிவரும் சுவைமன்றில் ஆடும் கூத்தன்
முத்தமிழாய்க் காட்சிதரும் மாட்சி யென்னே!

## ௩. பொன்னியாறு

18. மலைமகளைத் தழுவுதற்கு விழைவு முற்றி
மாலைபல தவமிருந்தே முகத்தைக் காட்டிக்
கலையொழுகு வியர்வையொடு நிலவோன் கூடிக்
களித்திடலால் மகிழ்பூத்துக் கனிந்து விம்மித்
தலைகிடத்தி வாழ்தலினால் சூலும் முற்றித்
தவழ்கின்ற ஒருமகளைப் பெற்றாள்! அந்த
அலைமகளைத் தெய்வமெனப் போற்றிக் காக்கும்
அருஞ்சோழன் திருவிடத்தில் ஓடி வந்தாள்!

19. குடகுத்தாய் ஈன்றவொரு செல்வம் எண்ணங்
குறையாத தெய்வமணி விளக்கம் ஆவி
மடங்காது தெம்பூட்டும் வைப்பு! பெண்கள்
மங்காதே யொளியூட்டும் கற்புத் தெய்வம்

அடங்காத அருள்செய்யும் இன்பம்; காதல்
ஆருத ஒருவாழ்வின் வாழ்வாம் என்றே
திடமான கரிகாலன் எடுத்துக் கொஞ்சித்
தீந்தமிழிற் பொன்னியெனப் பெயரு மிட்டான்!

20. தாலாட்டுப் பருவமொரு இன்ப மென்றே
தங்கத்திற் செய்தொட்டில் கட்டி யன்புப்
பாலாட்டிப் பைந்தமிழை யூட்டி யென்றும்
பார்த்திருக்கப் புலவர்களை வைத்தான்! தென்றல்
காலாட்டிக் கையாட்டிக் குறும்பு செய்து
களியாட்டி யின்புறுத்தும் தேனுர் கொன்றைக்
கோலாட்டி முத்தமிடும் அழகு கண்டார்
கொள்கையினிற் குழந்தையுமே தோன்ரு போமோ?

21. அடியெடுத்து வைத்திடுவாள்; ஆடிப் பாடி
அகங்கரைய வைத்திடுவாள்; அழகு சிந்தி
ஒடியெடுத்து வைத்திடுவாள் இடையை யென்றே
ஓம்பிடுவான் அணிபூட்டி ஆடை கட்டி!
படியெடுத்து வைத்திடுவாள் இந்த நாடு
பார்வையிலே சொக்கித்தான் முடியும் கொல்லோ?
மடியெடுத்து வைத்திடுவாள் அடடா! இன்ப
மணிகளையார் கட்டுரைத்துச் சொல்ல வல்லார்?

22. தொடியலைக்கை கலகலக்க வீசி மேனி
தொய்யெழுதிப் பார்த்திடவே மின்னிக் கூந்தல்
முடியலைக்கை சோதிடலால் சிதறும் பூக்கள்
முன்வான மீன்களெனத் துள்ளும்! நெற்றி
பொடியலைக்கும் குங்குமமும் எரியும்; கன்னம்
பொன்மஞ்சள் பழுத்திருக்கும் செவ்வி காட்டிக்
கடிமணத்துக் கன்னியெனப் பொன்னி செல்லக்
கண்கண்ட தெய்வமென்றே வணங்கி நிற்பார்!

23. பரிசெனவே அன்னவளின் கையிற் சோழன்
பார்புகழும் கலைக்கோவில் தந்தான்! சோலை
விரிமரமா கமுகுபலா தென்னை புன்னை
விழைவாழை யத்தனையும் வளர்ந்து பொன்னி
புரிமணமாப் பந்தலெனக் கோலங் கொள்ளப்
பூங்குயில்கள் மயில்களெலாம் விழாவே செய்யும்
அரியவகை நெல்லெல்லாம் அளிக்கச் செய்கள்
ஆருயிர்கள் வந்துபெறும் விருந்தும் என்னே!

24. கதிர்வீசி வருபரிதி, உயிரை வீசிக்
காலமெல்லாம் கண்துஞ்சா துழைத்த யாக்கை
உதிர்வீசி வருமுழவோர், நாட்டைக் கண்டே
உளஞ்சிறக்க ஆள்கின்ற அமைச்சர், நன்மை
முதிர்வீசி அறம்முழங்கும் மன்னர், நாட்டு
மூதாளர் தமிழ்வாணர் தொண்டர் இன்பச்
சதிர்வீசி வருவிறலி யாரும் இங்கே
சார்நெஞ்சால் வழிபடுவார் என்றும் அன்பே!

25. ஆல்விழுதுப் பிறவிகளை அறவே வீழ்த்தி
ஆண்டவனை வாளாக்கிப் புலனைக் கொன்றே
சாலுயிரின் தொண்டர்களாய் நின்ற நாவ
லூர்த்தோழர் இசைத்தமிழும் முயற்சி வெல்லக்
கால்விழவும் கைவிழவும் தேய்ந்து காணக்
கயிலைக்குச் சென்றதிரு அரசர் பாட்டும்
பாலொழுகு கலைவாயின் மெய்யாம் பிள்ளைப்
பைந்தமிழும் வாழ்த்தெடுப்பப் போதா வென்றே.

26. அன்பினுக்கோர் இலக்கியமாய்க் கண்கள் பொங்கி
அழுகைக்கோர் நெஞ்சூற்ருய் உருக்கும் ஆற்ருல்
என்பினுக்கோர் நெருப்பாகி யீர்க்கும் பாட்டால்
எந்தமிழ்க்குக் குழைவளித்த வாத வூரர்,
துன்பினுக்கோர் வழிநெஞ்ச இருட்டைப் போக்கும்
தூயமறை முப்பொருளின் உண்மை சொன்ன
இன்பினுக்கோர் மெய்கண்டார் வந்து வாழ்த்த
என்றென்றும் மகிழ்ந்திருப்பாள் பொன்னி அம்மா!

27. பல்கோடிப் பரிதியைப்போல் அழகு பூத்தே
பவழவாய்ச் சிரிப்புதிர்த்துப் பாம்ப ணைத்து
நல்லாள்போற் கிடக்கின்ற அரங்கன் தேனை
நயந்துண்டு கிறுகிறுத்துப் பாக்கள் சூட்டும்
வில்லாண்ட குலசேகர் மங்கை மன்னர்
வியன்மழிசை திருப்பாணர் ஆழ்வா ரெல்லாம்
பல்லாண்டு பல்லாண்டு வாழ்த்து கின்ருர்
பாவையிங்கு நன்றிசெய்து விம்மிச் செல்வாள்!

28. முன்ஞேர்கள் விட்டகுறை தொட்டு மக்கள்
மூடத்தைப் பழியாக்கி முனிந்து கொன்றே
என்ஞேரும் உளங்கொண்டு போற்றும் வண்ணம்
ஏரான கருத்துக்கள் பாடித் தந்த

பின்னோராம் பட்டினத்தார் தாயு மானர்
பீடுடைய இராமலிங்கர் களிப்பி லூறி
நன்பாட்டுப் பாடிடுவார் இசையின் வெள்ளம்
நங்கையவள் நெஞ்சினிலே மிதந்து செல்லும்!

29. 'பூந்துருத்தி' முந்தானை கோலிக் 'கண்டிப்'
புரிதிருத்தி 'ஐயாற்றி'ல் நடந்து 'திங்கள்'
போந்திருந்து 'பழனத்'தில் உண்டு கீழைக்
கோட்டத்தில் 'குடம'ணைத்து 'மருதி'ற் சூடி
மாந்'துறைசை'ப் பாலருந்தி மயக்கம் விட்டு
'மயிலாடு துறை'யரங்கில் ஆடிச் சென்றே
ஏந்தெழிலைக் களைந்திடவும் பூம்பு காரில்
எத்துயரும் விட்டுதவம் கடலிற் செய்வாள்!

## ச. திருக்கட வூர்

30. தெய்வத்தை யுருவாக்கும் பொன்னி நாட்டில்
தென்கிழக்குக் கடவூரை நினைந்து விட்டால்
உய்ந்திடுவோம் அபிராமி யுள்ளக் கோவில்
உயர்ந்திருப்பாள் அவளடியே எங்கள் வாழ்வாம்!
கைதொழவே கட்டிவைத்த கலையின் கோவில்
காலமெலாம் மக்கட்கோர் வைப்பே யாகும்
மெய்ந்நெறியான் வழிபட்ட பட்டன் பெற்ற
மேதகவாம் அருட்பரிசை யினிதே காண்பீர்.

31. தாமரைவெற் றிலைவெண்பூத் தேங்காய் மூடி
தாங்கிவயற் பொன்தட்டில் நீலம் மின்ன
மாம்பழமாம் விளக்குகளும் தொங்க நீரில்
மண்ணகலில் செவ்வாம்பல் எரிந்து நிற்க
ஓம்கரும்புச் சாறடுப்புப் புகைந்து நாற
ஒருதாழை தெய்வமடைச் சோறு பெய்யக்
காமருகோன் கதிரவனைத் தொழுது நாளும்
கடவூரின் மருதவளம் வாழும் மாதோ!

32. உள்ளத்தில் ஒருசிறிதும் கொடுமை யின்றி
ஒப்புரவு செய்துயரும் எண்ணம் அன்பு
வெள்ளத்தில் உலகத்தை வாழ வைக்கும்
வேள்நெறியாம் சைவத்தில் விளையும் எண்ணம்
பள்ளத்தில் ஒருவரையும் வீழச் செய்யாப்
பண்பான அருளாண்மை எண்ணம் எல்லாம்
கள்ளத்தால் அழியாமற் பூணுப் பூண்டு
காக்கின்ற கடவூராம் நகரம் வாழி!

(தொடரும்)

# தமிழர் சமய இலக்கியப்பேழை அறிமுக விழா

தமிழ் மக்கள் இல்லந்தோறும், திருக்கோயில்தோறும் சமயநிலையந்தோறும் அருள் மணமும் அறிவு மணமும் பரப்புதற்பொருட்டுச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் உருவாக்கியுள்ள 'தமிழர் சமய இலக்கியப் பேழை'யை அறிமுகப் படுத்தும் விழா 29-4-75 அன்று மாலை சென்னை மறைமலை யடிகள் நூல்நிலையத்தில் அமைந்துள்ள 'வள்ளலார் திருவருள் மண்டபத்'தில் நடைபெற்றது. சென்னை உயர்நீதிமன்ற நடுவர் மாண்பமை என். கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழக அறநிலைய அமைச்சர் மாண்புமிகு எம். கண்ணப்பன் அவர்கள் தொடக்கவுரை ஆற்றிய பின் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழர் சமயப் பேழையை அன்பர்களுக்கு அறிமுகப்படுத்தினர்.

**வரவேற்புரை**

வரவேற்புரை நல்கிய தாமரைச் செல்வர். வ. சுப்பையா பிள்ளை பேழையின் சிறப்பை எடுத்துச் சொன்னர். "இந்தத் தமிழர் சமய இலக்கியப் பேழையில் சைவ-வைணவ சமய நூல்கள் அடங்கியிருக்கின்றன. தோத்திர, சாத்திர நூல்கள் இவை. இந்நூல்களை அருளிச் செய்த அருளாளர்களும் இப்போது இங்கே நம் கண்ணுக்குப் புலப்படாமல் அமர்ந்திருக்கிருர்கள் என்று உறுதியாக நம்பலாம்.

முதற்கண் 1970 இல் 'தமிழர் பழந்தமிழ் இலக்கண இலக் கியப் பேழை' கோகலே மண்டபத்தில், மதுரைப் பல்கலைக் கழகத்தின் இன்றைய துணைவேந்தராயிருக்கும் திரு. சை. வே. சிட்டிபாபு அவர்களால் இன்றைய நலத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தலைமையில் அறிமுகம் செய்துவைக்கப் பெற்றது. அதைக் கண்ட தவத்திரு. குன்றக்குடி அடிகளார் 'சமய இலக்கியப் பேழை' ஒன்றை உருவாக்கவேண்டுமென்ற எண்ணத்தைத் தெரிவித்தார்கள். அதன் பின்னர்தான் இப்பேழை உருவாக்கப்பட்டது.

இக் கழகம் தமிழையும் சைவத்தையும் வளர்க்க வேண்டு மென்ற நோக்கத்துடன்தான் 1920 இல் தொடங்கப் பெற்றது. இது நூற்பதிப்புக்கேற்பட்ட முதல் கூட்டு நிறுவனம். இக் கழகத்திலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்துதான் இந்த நூல்நிலையம் போன்ற அறநிலையங்களை நடத்த முடிகிறது. இதற்கு முன்பு வரி விதித்தபோது மாண்புமிகு சி. சுப்பிர

மணியம் அவர்கள்தாம் முன்வந்து வரி விலக்கு வாங்கித் தந்தார்கள். இன்று ஆட்சியிலிருப்பவர்களும் கழகத்திற்கு நிரம்ப உதவி செய்யவேண்டும். அரசு பாடநூல்களை வெளியிடுவதால் கழகநூல் விற்பனை குறைந்து அற நிலையங்களை நடத்துவதற்கு வருவாய் போதவில்லை. எனவே அரசிடம் பொருளுதவி கேட்டுள்ளது.

இப் பேழையில் பன்னிருதிருமுறை, பதினான்கு சாத்திரம், தேவாரத் திரட்டுகள், சமயகுரவர்கள் வரலாறு, தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரிநாதர், வள்ளலார் ஆகியோரின் அருட்பாடல்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், அட்டப் பிரபந்தம் போன்ற 54 நூல்கள் உள்ளன. இதனை எல்லாத் திருக்கோயில்களும் சமயநிறுவனங்களும் வாங்கிப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.''

**தலைமையுரை**

அடுத்து, **நடுவர் மாண்பமை என். கிருட்டிணசாமி ரெட்டியார்** அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினர். ''இன்றையதினம் இங்கு வரும் நல்ல வாய்ப்பு எனக்குக் கிட்டியுள்ளது. 1920 இல் இக் கழகம் தம் தமையனார் திருவரங்கம்பிள்ளை யவர்களால் தொடங்கப்பெற்றது என்றார்கள். அந்தக் காலத்தைப் பற்றி நினைக்கும்போது அதிர்ச்சி ஏற்படுகிறது. அந்தக் காலத்தில் ஆங்கில மோகம் அதிகமிருந்தது. தமிழில் பேசினால் ஒரு பைசா அபராதம் என்று கல்லூரியில் சொல்லிய காலம் அது. அப்படிப்பட்ட ஆங்கிலமோகம் இருந்த காலத்தில் ஒரு சில பெரியார்கள் தமிழை வளர்த்தார்கள். அவர்களில் ஒரு துணிச்சல் உள்ளவர்தாம் இந்தக் கழகத்தைத் தொடங்கித் தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். ஒவ்வொரு தமிழனும் அவரை மனத்திலே வைத்திருக்கவேண்டும், மதிப்பு செலுத்த வேண்டும். இந்தக் கழகம் ஆரம்பித்தபோது சிறிய கழகமாகத் தான் இருந்திருக்கவேண்டும், அவ்வளவு ஆதரவும் இருந்திருக்காது. அவர்கள் மறைந்தபின் திரு. சுப்பையாபிள்ளை அவர்கள் செய்துள்ள சேவையைப் பாராட்டித்தான் பாரததேசம் அவருக்கு பத்மஸ்ரீ (தாமரைச் செல்வர்) என்ற பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்துள்ளது.

''நூல்களில் வழங்கப் பெற்றுள்ள அறிவுரைகள் மனிதனை வளமார வாழவைக்கும். அத்தகைய நூல்கள் நமக்கு அவசியம். அந்த நூல்களைப் பதிப்பித்து அதற்காக நாள்தோறும் உயிரையே அர்ப்பணம் செய்து இந்த ஒரு பெரும் பணியைத்

திரு. சுப்பையாபிள்ளை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் இதற்கு ஒவ்வொரு தமிழனும் அவரை எப்போதும் மனதிலே இருத்திக் கொண்டிருக்கவேண்டும்; எப்போதும் அவருக்கு நன்றிக்கடப்பாடு உடையவராய் இருக்கவேண்டும் என்று நான் இந்த நல்ல வேளையில் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

''இன்றைக்கு ஆயிரத்து ஐந்நூறு நூல்களுக்குமேல் அவர்கள் பதிப்பித்து இருக்கின்றார்கள் என்றால் இது சாதாரண மான தொண்டன்று, பெரிய சேவை. மனிதன் வளமாக வாழ் வதற்கு வழிகாட்டும் புத்தகங்களைப் பதிப்பிக்கும் சேவையைப் பெரிய சேவையாகக் கருதவேண்டும். அதிலும் அவர்கள் இலக்கியப் புத்தகங்களை வெளியிட்டு வருகிறார்கள். எளிதில் விற்பனையாகும் நாவல்களை வெளியிடுவதில்லை. இன்னும் நல்ல நல்ல புத்தகங்களை அவர் வெளியிட விரும்புகிறார். அதற்கு அவருக்குப் பணம் வேண்டும்.

''இந்தப் பேழையில் மிக அரிய தேவார திருமுறை நூல்கள் உள்ளன. இவற்றைப் படித்தால் அருளாளர்களை நேரிலே பார்ப்பது போலாகும். இதில் சைவம், வைணவம் இரண்டை யும் இணைக்கும் வகையில் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தையும், அட்டப் பிரபந்தத்தையும் வைத்துள்ளார்கள். கிட்டத்தட்ட ஐம்பத்துநான்கு புத்தகங்களை இதில் அமைத்துள்ளார்கள். இந்தப் பேழையின் விலை 650 ரூபாய் என்று வைத்துள்ளார்கள். இவ்வளவு விலை கொடுத்து எல்லோரும் வாங்க முடியுமா என்று அடிகளார் கேட்டார்கள். காகித விலை, அச்சுக் கூலி, மரவிலை போன்று எல்லாம் ஏறியிருக்கும் காலத்தில் அவர்கள் இவ்வளவு விலையில் கொடுத்திருப்பதே பெரிய செயல். தனிப்பட்டவர் களோடு கல்வி நிறுவனங்களும், சமய நிறுவனங்களும் கட்டாயம் இதை வாங்கவேண்டும். அதற்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் வேண்டிய உதவி செய்யவேண்டும்.

''இதில் உள்ள புத்தகங்கள் எல்லோர் கையிலும் இருக்க வேண்டும். இவற்றை எல்லோரும் படிக்கவேண்டும். இத்தகைய சேவையைத் திரு பிள்ளை அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தொடர்ந்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.''

**தொடக்கவுரை**

தமிழக அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தியதில் குறிப்பிட்டது.

"இன்றைக்கு நடைபெறுகின்ற நிகழ்ச்சி ஏதோ இந்த நூலை அறிமுகப்படுத்தி நாட்டு மக்கள் மத்தியிலே விளம்பரப்படுத்தி விற்பனை செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் இந்த விழாவை ஏற்பாடு செய்யவில்லை; ஏனென்றால் அவர்கள் ஒரு நூலைத் தயாரித்து வெளியிடுகின்ற நேரத்தில் அந்த நூலை எத்தனை பேர் வாங்கிப் படிப்பார்கள், அதிலே எவ்வளவு ரூபாய் நமக்கு லாபம் கிடைக்கும் என்று கணக்குப் போடுவதில்லை. அந் நூலை வெளியிடுகின்ற காரணத்தால் எதிர்கால சமுதாயத்திற்கு இன்றைக்கில்லாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் நன்மையுண்டாகும். அழிந்து போகக்கூடிய இலக்கியங்களை அழிந்து போகாமல் காப்பதற்காகத்தான் அவர்கள் நூல்களை வெளியிடுகிறார்களே தவிர, எத்தனை பிரதிகள் இதில் விற்பனை ஆகும், எத்தனை ரூபாய் இதில் லாபம் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு என்றைக்கும் நம்முடைய பெரியவர் சுப்பையா பிள்ளை அவர்கள் இந்தக் காரியத்தில் இறங்கியது கிடையாது என்பது குறைந்த கால அனுபவத்தில் நான் அறிந்தது எனச் சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன். அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்தான் அவர்களுடன் எனக்குப் பழக்கம், எப்போதாவது என்னிடம் வருவார்கள். இந்த நூல்களை எல்லாம் விற்பனைசெய்ய வேண்டுமென்று அவர்கள் வருவது கிடையாது. அவர்கள் நீண்ட நேரம் எடுத்துக்கொண்டு தமிழுக்காகவும் தமிழ்ப் பண்பாட்டுக்காகவும் இந்தக் கழகம் ஆற்றி வருகிற சேவையைப்பற்றிச் சொல்வார்கள்.

"தமிழ் மொழியை அழிப்பதற்கு இந்தி இந்த நாட்டிற்குள் நுழைந்தபோது இந்தக் கழகம் போர்க்கொடியை உயர்த்தியுள்ளது. இம் மொழியைக் காப்பதற்கு இஃது என்றும் தயங்கியது இல்லை. இதை வெறும் வியாபார நிறுவனம் என்று அவர்கள் நினைத்திருந்தால், நம் நீதிபதி அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஏராளமாக விற்பனையாகியிருக்கக் கூடிய பல்வேறு நூல்களை வெளியிட்டு இன்னும் பெரும் பொருளை ஈட்டியிருக்க முடியும். ஆனால்,அதைநோக்கமாகக் கொள்ளாமல் நம்முடைய இலக்கியங்களை, யாரும் எந்தப் பதிப்பகத்தாரும் பதிப்பிக்க முன் வராத நூல்களையெல்லாம் அவர்கள் பதிப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு இன்றைய தலைமுறையினராய நாம் நன்றி செலுத்தவேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறோம்.

"கடந்த ஆண்டு இந்த மறைமலையடிகள் நூல்நிலையத்தைப் பார்க்க என்னை அவர்கள் அழைத்தார்கள். ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் நூல்நிலையத்தையும், அஃது எப்படியெல்லாம் அமைக்கப்பட்டது என்ற சான்றுகள் அனைத்தையும் எடுத்து

விளக்கிக் காட்டினுர்கள். அதற்குப் பின்னுல்தான் இஃது ஏதோ ஒரு சாதாரணமான புத்தகம் வெளியிடுகின்ற நிலையம் அன்று. இது தமிழ்நாட்டினுடைய வரலாற்றை, தமிழ்மொழியினுடைய வரலாற்றை, தமிழ்மொழிக்கு ஆபத்து ஏற்பட்ட நிலையிலெல்லாம் எப்படி இந்தக் கழகம் கைகொடுத்துக் காப்பாற்றி இருக்கிறது என்ற வரலாற்றைச் சொல்லுகின்ற, ஒரு நிலையமாக இஃது அமைந்திருக்கிறது என்பதை நான் புரிந்துகொண்டேன்.

"அந்த வகையிலேதான் அவர்கள் இன்றைக்கு இந்தத் 'தமிழர் சமய இலக்கியப்பேழை' ஒன்றை உருவாக்கி நம் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்த இருக்கிறுர்கள். தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் இதை ஆதரிக்கக் கடமைப்பட்டவர்கள். விலையைப் பற்றியெல்லாம் கவலைப்படக்கூடாது. அவர்கள் இதில் வரும் பொருளைக்கூட இன்னும் அதிகமான புத்தகங்களை வெளியிடப் பயன்படுத்துவார்கள். அவர்கள் தமிழுக்காகச் சேவை செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகிறுர்கள். அந்தப் பணியிலே ஒன்ருகத்தான் இன்றைக்கு இந்தப் பேழையினைத் தயாரித்துள்ளார்கள். இந்தப் பேழைக்கு நம்முடைய தமிழ் நாட்டு மக்களும் பல்வேறு நிறுவனங்களும் நல்ல ஆதரவு கொடுக்குமென்ற நம்பிக்கை எனக்குண்டு; நாங்கள் செய்ய வேண்டிய கடமையையும் செய்யக் கடமைப்பட்டவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"பெரியவர் சுப்பையாபிள்ளை தம்முடைய வாழ்நாளையே தமிழுக்கு அர்ப்பணித்துக்கொண்டு தமிழைக் காப்பாற்றுவதற்காகவும், அதேபோல இந்துசமயத்தைச் சாதாரண மக்கள் மத்தியிலேயும், சமயத்தின் தத்துவங்களையும், கருத்துகளையும், அவர்கள் அறிந்துகொள்கின்ற வகையில் மிகச் சிறந்த முறையில் அவர்கள் பணியாற்றி வருகிறுர்கள். அவர்கள் இன்னும் நீண்டநாள் வாழ்ந்து இந்தத் தமிழ்மொழிக்கும், தமிழ் நாட்டுக்கும், இந்து சமயத்திற்கும் நல்ல பணிகளையெல்லாம் ஆற்றவேண்டுமென்ற என்னுடைய ஆசையை அவர்களுக்கு வாழ்த்தாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்."

அறிமுகவுரை

தமிழர் சமய இலக்கியப் பேழையை அறிமுகப் படுத்தி, தவத்திரு குன்றக்குடி அடிகளார் நிகழ்த்தியவுரை:

"இந்தத் தமிழர் சமய இலக்கியப் பேழை அறிமுக விழா பலருடையநினைவில் நிலைத்திருக்கின்றவகையில் உருப்பெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே என்ன புத்தகம் வெளியானாலும் அஃது உடனே என்னுடைய நூலகத்துக்குவந்துவிடும். எப்போ தாவது ஓய்வு கிடைக்கும்போது நானே இந்தக் கழகத்துக்கு நேரில்வந்து புத்தகங்களை வாங்கிக் கொண்டு போவேன். இருபத்தைந்து ஆண்டுகளாகக் கழகத்தின் வெளியீடுகளைத் தொடர்ந்து படித்துவரும் வாசகன் நான்.

"தமிழர் சமயம் என்பதை நாம் பாதுகாக்க வேண்டும். தமிழ் நாட்டில் தொண்டு தொழிலாக மாறிவிட்ட காரணத்தால் தான் சில குறைபாடுகள் ஏற்பட்டுவிட்டன. இந்நிலை மாற வேண்டும். தமிழ்நாட்டில் இன்னும் பாதிப்பேர் இருட்டு உலகத்தில் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் தடுத்துக் காப்பாற்ற, பாதிரிமார்களை, முழுநேரத் தொண்டர்களை உருவாக்க வேண்டும். இல்லங்கள்தோறும் எழுந்தருளி சமயத்தைப் பரப்பும் தொண்டர்கள் தேவை

"தமிழர் சமய இலக்கியப் பேழையை இன்று மகிழ்ச்சியுடன் நான் உங்கட்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன். என்னுடைய தூண்டுதல்தான் இந்தப் பேழையை அவர் செய்ததற்குக் காரணம். சங்க இலக்கியப் பேழையைக் கோவில்களில் எல்லாம் வாங்கச் செய்யவேண்டும் என்று என்னிடத்தில் அடிக்கடி வற்புறுத்தினார்கள். சங்க இலக்கியப் பேழையைக் கோயிலில் வாங்கு என்று எப்படிச் சொல்வது, நீங்கள் ஒரு சமய இலக்கியப் பேழையைச் செய்தாலும் சொல்லலாம், பொருத்த முண்டு, என்று நான் அவர்களிடத்தில் சொன்னேன். அவர்களும் சரி என்று சொன்னார்கள். அப்புறம் அதைச் செம்மையாகச் செய்திருக்கிறார்கள். இந்தப் பேழையில் நிறையப் புத்தகங் களைச் சேர்த்திருக்கிறார்கள். காலத்தால் அழிக்க முடியாத நூல் களைக் கொண்டது இப் பேழை.

"பிள்ளையவர்கள், தமிழ், தமிழினம், தமிழ்நாடு ஆகிய வற்றின்மீது நிரம்பப் பற்றுக் கொண்டவர்கள். இந்தி எதிர்ப் பின்போது நம்மோடுகூட இருந்தவர்கள். எந்தத் தமிழ் வரலாற்றை எழுதினாலும் நூற்பதிப்புக் கழகத்தின் வரலாற்றைச் சேர்க்காமல் எழுத முடியாது. இந்த அரசு பொறுப்பேற்றபின் தான் நடுவண் அரசுக்குப் பரிந்துரை செய்து அவருக்குத் 'தாமரைத்திரு' என்ற பட்டத்தை வாங்கிக் கொடுத்தது. ஆக இந்த அரசு பிள்ளையவர்கள் பக்கம் இருக்கிறது. ஆனால் அவர்கள், நம்முடைய அரசு, நம்முடைய அமைச்சர்கள் நமக்கு

இன்னும் கூட உதவிகள் செய்யக் கூடாதா என்று என்னிடம் சொல்லி வருந்துவார்கள். அவர்கள் புத்தக விற்பனையில் பல லட்சக்கணக்கான ரூபாயை முடக்கி வைத்துள்ள கவலையில் கூறுகிறார்கள். அரசு இன்னும் நூலக வரியைக் கூட்டியாவது நூல்களை வாங்கலாம். இந்த அரசு பழைய வரலாற்றைப் புதுப்பிக்கும் ஆற்றல் பெற்றது. பல திருக்கோயில்கள் கழக நூல்களை வாங்கச் செய்து மக்களுக்குப் பயன்படுமாறு நூலகங்களை அமைக்க இந்த அரசு இன்னும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"இந்தச் சமய இலக்கியப் பேழை வீடு தவறாமல் இருக்க வேண்டிய பேழை. அவர்கள் நல்ல பணி செய்திருக்கிறார்கள், தொழில் செய்வதில் கூட ஒருவரை முன்னேற்றுகிற தொழில் புண்ணியமான தொழில். இந்தச் சமய இலக்கியப் பேழை நாட்டுக்கு நலம் செய்யத் தக்கது. இதை நான் அறிமுகப் படுத்தி இந்த முதல் பேழையை நானே வாங்கிக்கொள்கிறேன்."

விழாத் தொடக்கத்தில் இசைச் செல்வி சேலம் செயலெட்சுமி அம்மையார் இறை வணக்கப் பாடலைப் பாடினார்கள். கழக ஆட்சியாளர் இறுதியில் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

விழாத் தொடங்குமுன் திருமுறைச் செல்வர் திரு. இராச சேகரன் அவர்கள் திருமுறைப் பாடல்களை இன்னிசைக் கருவி களோடு இசை பெற வழங்கினார்கள். விழாவிற்குப் பெரு மக்கள் பலர் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளனர். அருள்மிகு திருக்கோயில்கள் மூன்றின் அதிகாரிகளும் தவத்திரு அடிகளாரும், அறிஞர் பெருமக்கள் இருவரும் நேரிலே சமயப் பேழையை வாங்கி ஊக்க மளித்தனர்.

---

## தமிழர் சமய இலக்கியப் பேழை அறிமுக விழா வாழ்த்துகள்

### எம்பெருமானுக்குச் செய்யும் தொண்டு

தண்டமிழ்க்குச் செய்யும் தொண்டு, தமிழ் உகந்த எம் பெருமான் செந்தமிழ்ச் சொக்கனுக்குச் செய்யும் தொண்டாகவே பாவித்து, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நாளும் தமிழ் நற்றொண்டு ஆற்றுவது பாராட்டுக்குரியது.

தமிழ் நூற் செல்வங்களைக் காப்பாற்றிப் பரப்பும் உயர் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட கழகம், தமிழர் சமய

இலக்கியங்களைச் செம்மையுற இலக்கியப் பேழையினுள் இட்டுப் பாதுகாப்புடன் ஈனும் தகவு இன்புறுதற்குரியது.

தமிழ்ச் சமய இலக்கியப் பேழை அறிமுக விழாவெடுத்து, அதில் தக்க சான்றோர்கள் அறிஞர்களைப் பங்கேற்கச் செய்த சிறப்புப் பொருத்தமுடையது.

தமிழர் சமய இலக்கியப் பேழை இல்லங்களெங்குந் திகழவும், விழாச் சிறக்கவும், கழகத் தொண்டு செழிக்கவும், அன்பர்கள் நலம் பல பெற்று நீடு வாழவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

தவத்திரு சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
தருமையாதீனம்.

### பயன் பெறவேண்டிய அரிய கருவூலம்

கழகம் ஆற்றி வரும் தொண்டுகள் மிகச் சிறந்தவை, பயனுள்ளவை. எப்படியும் சமய இலக்கியங்கள் எல்லோருடைய இல்லங்களிலும் இடம் பெற்றுப் பயன்பட வேண்டும் என்ற அரிய நோக்கத்தோடு பெரிதும் முயன்று செய்யப்படும் அரும் பெரும்பணி இதுவாகும்.

*மணிவாசக மன்றம், அரியலூர்.*

### போற்றற் குரிய பணி

முத்தமிழ் வித்தகர் போற்றும் இலக்கியத்தை
இத்தமிழ் மன்றம் இனிதாக—பக்தர்
உணர்ந்திங்குப் போற்றுமிப் பேழைப் பணிக்குப்
பணிந்து வணங்குமென் வாழ்த்து.

திருச்சி, புலவர், த. இரா. சின்னப்பன், எம். ஏ.

மற்றும் கீழ்க்காணும் பெருமக்கள், புலவர்கள், அறிஞர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்துள்ளன :

பேராசிரியர், ப. இராமச்சந்திரன், எம். ஏ., திருச்சி; பேரா. அ. மு. பரமசிவானந்தம், சென்னை; இளமுருகு பொற்செல்வி, சென்னை; பொ. மாணிக்க வாசகம், திருச்சி; ஜி. வரதராஜன், பி. ஏ., திருச்சி. முத்து மு. முத்துக்கருப்பஞ் செட்டியார்; ச. திருஞான சம்பந்தன், எம். ஏ., அண்ணாமலை நகர், ஈரோடு புலவர் பொ. முனியப்பன்.

———



முன்னாள் குடியரசுத் தலைவர்

மாண்புமிகு டாக்டர். எஸ். இராதாகிருட்டிணன்

தோற்றம் : 5-9-1888. மறைவு : 17-4-1975.

# தமிழர் சமய இலக்கியப் பேழை வெளியீட்டு விழா
# (29—4—'75)

## தலைமையுரை




உயர்நீதிமன்ற நடுவர் மாண்பமை கிருட்டிணசாமி ரெட்டியார்
தலைமையுரை ஆற்றுகையில் தவத்திரு அடிகளாரும்
மாண்புமிகு அமைச்சரவர்களும் உன்னிப்பாகக் கேட்டல்

## முதல் பேழைத் திறவுகோலைப் பெறுதல்




தவத்திரு அடிகளார் நடுவர் அவர்களிடம் பெறுதல்.

## தத்துவ வித்தகர்
## டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் மறைவு

தத்துவப் பேரறிஞர் ஒருவர் ஒரு நாட்டின் ஆட்சித் தலைவராயமர்தல் பெரும்பேருகும் என்பர். அத்தகைய கிடைத்தற்கரிய பெரும்பேற்றை நம் இந்திய நாட்டிற்கு அளித்தவர் மறைந்த தத்துவப் பேறிஞர், முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் அவர்கள். கல்லூரி ஆசிரியர்—பல்கலைக் கழகத் துணைவேந்தர்—வெளிநாட்டுத் தூதுவர்—துணைக் குடியரசுத் தலைவர்—குடியரசுத் தலைவர் போன்ற பல பெரிய பொறுப்புகளை ஏற்று அப்பொறுப்புகளை ஏற்றதால் அப் பொறுப்புகளுக்குப் பேரும் புகழும் ஈட்டித் தந்தவர் இராதாகிருட்டிணன்.

ஞானத்திலே பரமோனத்திலே சிறந்து விளங்கும் பாரத நாட்டின் தத்துவ வித்தகர், தத்துவங்களில் தலையாய கிரேக்க தத்துவத்திற்கு இணையான இந்திய தத்துவத்தின் சிறப்பை மேலை நாடுகளுக்கு எடுத்துரைத்த தத்துவ ஞானி அவர்.

இரும்புத் திரைக்குப் பின்னிருந்த இரும்பு மனிதரான ஸ்டாலினின் இரும்பு இதயத்தைக் கனிய வைத்தவர் அவர். ஸ்டாலினைச் சந்தித்த ஒரே ஒரு வெளிநாட்டுத் தூதுவரும் அவரே. 'என்னை மனிதனாக எண்ணிப் பார்த்தவர் தாங்கள் ஒருவர்தாம்' என்று அந்த இரும்பு மனிதரே இதயங்கசிந்து பேசச்செய்தவர்.

1888 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் தணிகைமலை வேலன் குடிகொண்டுள்ள திருத்தணிகையில் தோன்றியவர் அவர். திருத்தணிகையில் பள்ளிக் கல்வியை முடித்த பின் வேலூர் ஊரிசுக் கல்லூரியிலும் சென்னைக் கிறித்துவக் கல்லூரியிலும் பயின்று தத்துவத் துறையில் அவர் பட்டம் பெற்றார்.

வெள்ளையரின் ஆட்சியில் கிறித்துவப் பாதிரிமார்கள் நடத்திய கல்லூரிகளில் படிக்க நேர்ந்ததால் இந்து சமயத்தைத் தாழ்த்தியும் கிறித்துவ சமயத்தை உயர்த்தியும் பாதிரிமார்கள் பேசி வந்த பேச்சுகள் இளைஞர் இராதாகிருட்டிணன் உள்ளத்தில் இந்திய தத்துவ ஞானத்தைப்பற்றி ஆழ்ந்து படிக்கச் செய்தது. 'சுவாமி விவேகானந்தரின் எழுச்சி மிக்க பேச்சால் என்னை ஓர் இந்து என்று நான் பெருமையாக எண்ணிக் கொண்டிருந்தேன். பாதிரிமார்களின் பேச்சு என் உள்ளத்தைப் புண்படுத்திவிட்டது' என்று இராதாகிருட்டிணன் கூறியுள்ளார்.

அதன் பயனாக வேதாந்தத்தைப் பற்றியும் பிற இந்து சமயங்களைப் பற்றியும் ஆழ்ந்து படித்தார். எம். ஏ. தேர்வு எழுதுவதற்கு முன்னரே, இருபது வயது இளைஞராக இருந்த காலத்தில் 'வேதாந்தம் கூறும் அறம்' என்ற நூலை எழுதி அக்

கல்லூரி முதல்வரின் பாராட்டுதலைப் பெற்றார். 'சிக்கலான தத்துவக் கருத்துகளை விளக்கி எளிய வாதங்களுடன் இனிய ஆங்கிலத்தில் அந்த ஆய்வுக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது' என்று முதல்வர் ஆக் (Hogg) பாராட்டினார்.

எளிய குடும்பத்தில் பிறந்த இராதாகிருட்டிணன் கல்லூரியில் படிக்கும் போதே கீழ் வகுப்பு மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்தார். அப்படிப் படித்தவர்களில் ஒருவர் மறைவுற்ற புகழ்பெற்ற வழக்கறிஞர் வி. எல். எத்திராஜ்.

எம். ஏ. படித்து முடித்தபின் சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று 1910 இல் எல். டி. பட்டம் பெற்றார். அவருடன் பயின்ற மாணவர்களுக்கு 'உளவியல்' பாடம் புரியாததால் இராதாகிருட்டிணன் ஆண்டிறுதியில் அப் பாடம் பற்றிப் பன்னிரண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அத் துறை ஆசிரியர்களுக்கே அவர் சொற்பொழிவுகள் பாடமாயமைந்தன.

சென்னை மாநிலக் கல்லூரியில் தத்துவத் துறை ஆசிரியர் பொறுப்பு 1909 இல் அவருக்குக் கிட்டியது. ஏழு ஆண்டுகள் அங்குப் பணியாற்றிய காலத்தில் மேனாட்டு, இந்தியத் தத்துவங்கள் அனைத்தையும் முறையாகக் கற்றார்.

மைசூர்ப் பல்கலைக் கழகம் அதன் தத்துவத் துறையின் தலைவராக இராதாகிருட்டிணனை ஏற்றுக் கொண்டது. அங்கிருந்து காசி இந்துப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரானார். அதே சமயத்தில் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் கீழை நாட்டுச் சமயங்களின் பேராசிரியரானார். ஆண்டில் பாதி நாள் காசியிலும் மீதிநாள் ஆக்சுபோர்டிலுமாக அவர் வாழ்ந்தார். 'கீழ்நாட்டுச் சமயங்களும் மேல் நாட்டுச் சிந்தனையும்' என்ற தலைப்பில் அவருடைய ஆக்சுபோர்டு சொற்பொழிவுகள் வெளிவந்தன.

காசிப் பல்கலைக் கழகத்தை விட்டுவிட்டுக் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டார். அமெரிக்க நாட்டிற்கும் சென்று தத்துவச் சொற்பொழிவுகளை ஆற்றினார். கீழை நாட்டுத் தத்துவம் என்றால் என்ன என்பதை அறியாதிருந்த மேனாட்டுத் தத்துவ அறிஞர்களும் மாணவர்களும் இந்து சமயத் தத்துவங்களை உணர்ந்து போற்றினர். இரண்டு தத்துவங்களின் இணைப்புப் பாலமாக இராதாகிருட்டிணன் விளங்கினார்.

நாடு விடுதலை பெற்றபின் நேரு பெருமகனார் வெளிநாட்டுத் தூதுவர்களாக அறிஞர்களை வெளிநாடுகட்கு அனுப்பி வைத்தார். டாக்டர் இராதாகிருட்டிணன் ருசிய நாட்டின் தூதுவராக்கப்பட்டார். தூதுவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டாலும் கல்வித்துறையை அறவே கைவிட்டுவிட அவர் விரும்ப

விலலை. அங்கிருந்தும் ஆண்டில் சில மாதங்கள் ஆக்சுபோர்டு சென்று சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார்.

1952 இல் இந்தியாவின் முதல் துணைக் குடியரசுத் தலைவராக டாக்டர் இராதாகிருட்டிணன் பொறுப்பேற்றார். அப்பொழுதும் அறிவுத் துறையை அவர் கைவிடவில்லை. யுனெசுகோ, சாகித்ய அகாதெமி போன்ற அமைப்புகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

இராசேந்திர பிரசாத் ஓய்வு பெற்ற பின் 1962 இல் இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவரானார். ஐந்து ஆண்டுகள் அந்தப் பெரும் பொறுப்பில் அமர்ந்துவிட்டு ஓய்வு பெற்றுத் தம் எண்பதாவது அகவையில் சென்னைக்கு வந்து சேர்ந்தார். டாக்டர் இராதாகிருட்டிணன் அவர்கள் தத்துவத் துறையில் ஆங்கிலத்தில் பல நூல்களை இயற்றியுள்ளார். இந்தியத் தத்துவத்தின் சிறப்பை மேனாட்டுக்கு உணர்த்தியவர் அவரே. அவருடைய அறிவுத் திறனை வியந்து பாராட்டி உலகின் நூற்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் 'டாக்டர்' பட்டம் வழங்கியுள்ளன.

இந்திய நாட்டிற்கு அவர் பெருமை தேடித் தந்ததற்காக இந்திய அரசு 1954ஆம் ஆண்டு 'பாரத ரத்னா' என்ற பட்டத்தை வழங்கி அவரைப் பெருமைப்படுத்தியது.

அவர் துணைக் குடியரசுத் தலைவராக இருந்தபோது தில்லியில் நடைபெற்ற அனைத்திந்திய அச்சக மாநாட்டின் புத்தகக் காட்சியில் இடம் பெற்றிருந்த சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் கையடக்கப் பதிப்பான 'திருக்குறள் மூலப் பதிப்பைக் கண்டு வியந்து பாராட்டி அதன் அச்சு, கட்டட முறைக்காகச் சிறப்புச் சான்றிதழ் வழங்கச்செய்தார்.

அவர் பெற்ற பாராட்டுகள் பல. எல்லாவற்றுக்கும் மணிமுடி வைத்ததுபோல அவர் காலமாவதற்கு ஒரு திங்கட்கு முன் பிரிட்டிசு நாட்டைச் சார்ந்த ஒருவர் நிறுவியுள்ள 8 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 'டெம்பிள்டன் பரிசு' அவருக்குக் கிடைத்தது. அவர் உடல் நலங்குன்றியிருந்த காரணத்தால் அவருடைய திருமகனார் டாக்டர் எஸ். கோபால் அவர்கள் நேரில் சென்று அப் பரிசுத் தொகையைப் பெற்று வந்தார்.

இத்தகைய வியத்தகு ஆற்றல் படைத்த பேரறிஞர் டாக்டர் இராதாகிருட்டிணன் அவர்கள் 16-4-75 அன்று இரவு 12-45 மணிக்கு நம்மையெல்லாம் விட்டுவிட்டு மறைந்தது நம் அனைவருக்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இந்தியத் தாய் இத்தகைய தத்துவ வித்தகர் மற்றொருவரை எப்போது காணப் போகிறாளோ ? யாரறிவர் ?.

# தமிழாசிரியர் பெருமக்களுக்குக் கழக ஆட்சியாளர் விண்ணப்பம்

## கழகம் 55 ஆண்டுகளாகச் செய்துவரும் ஆக்கப் பணிகள்

கழகத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் திருநெல்வேலியிலும் தலைமை நிலையம் சென்னையிலும்,

கிளை நிலையங்கள் திருநெல்வேலியிலும், 1968க்குப்பின்
மதுரை (50/51, மேல மாசி வீதி)
கோவை (22/819, ரெங்கே கவுடர் வீதி),
கும்பகோணம் (28, நகர் உயர்பள்ளிச் சாலை),
திருச்சி (24, நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம்)
ஆகிய ஊர்களிலும் திறக்கப்பெற்றன.

### நூல் வெளியீடு

பல துறைகளில் கழகம் இதுகாறும் **1550-க்கு மேற்பட்ட** நூல்களை வெளியிட்டிருக்கிறது. விற்பனை உரிமை முறையில் கழகம் அச்சிட்ட பிற நூல்கள் 50க்கு மேலிருக்கும்.

### செந்தமிழ்ச் செல்வி (ஆண்டுக் கட்டணம் ரூ 10/-)

'**செந்தமிழ்ச் செல்வி**' என்னும் மாத இதழை 49 ஆண்டுகளாக வெளியிட்டு வருகின்றது. செல்வித் தொகுதிகள் '**கலைக் களஞ்சிய**'மாகவும் '**வரலாற்றுக்களஞ்சிய**'மாகவும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படுகின்றன.

நண்பர் ஒருவர், தம் உடனாசிரியர், நண்பர் ஆகியோர்களில் பதின்மரிடம் மாதம் ரூபா ஒன்று விழுக்காடு 10 மாதம் வாங்கி அனுப்புகின்றனர். அவருக்கு ஒவ்வோரிதழிலும் 10 படிகள் அனுப்புவதோடு கையுறையாக ஒவ்வோர் இதழ் சேர்த்து அனுப்பப்பெறுகிறது. இந்தப்படி செல்வியைப் பரப்பும்படி வேண்டிக் கொள்கிறேன்.

### மறைமலையடிகள் நூல்நிலையமும் பிறவும்

எம்.ஏ., எம்.லிட்., டி.லிட்., பட்டப் படிப்புகட்கும் பிற துறைகட்கும் பயன்படக்கூடிய முப்பதினாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் ஆங்கில நூல்களையும், பழைய இதழ்கள், மலர்களையும் கொண்டு சென்னை இலிங்கிச் செட்டித்தெரு 105ஆம் எண் மாளிகையில் **மறைமலையடிகள் நூல்நிலையமும்,** நெல்லையில் **சிவஞான முனிவர் நூல்நிலையமும்,** பல்லாவரத்தில் **மறைமலையடிகள் கலைமன்றமும்** மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

**உலகில் எந்தப் பதிப்பாளரும் கட்டணமின்றி ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படும் வகையில் நூல் நிலையங்கள் நடத்துவதில்லை என்பது அறிதற்பாலது.**

தமிழறிஞர்களும் அன்பர்களும் தங்களிடமோ தங்களுக்குத் தெரிந்தவர்களிடமோ இருக்கின்ற பழைய தமிழ் நூல்கள், இதழ்கள், மலர்கள், ஓலைச் சுவடிகள் முதலியன அழிந்தொழிந்து போகவிடாமல் ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படும்படி மறைமலையடிகள் நூல்நிலையத்துக்கு அனுப்பித் தமிழ்த் தொண்டினைப் போற்றுமாறு வேண்டுகிறோம்.

## கழகத்தின் தொண்டு

கழகம் நூற்பதிப்புக்கென இந்தியாவில் முதன் முதலாகக் கூட்டுப் பங்கு நிறுவன (Public Limited Company) மாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

மறைமலையடிகளார் திட்டமிட்ட தனித்தமிழ்க் கொள்கைகளையும் சீர்திருத்தக் கொள்கைகளையும் பரப்புவதோடு தமிழ், தமிழர், தமிழ்நாடு முன்னேற்றங்கட்குத் தீங்கு ஏற்படும்போதெல்லாம் மறுப்புகள் எழுதியும், அறிஞர்களின் கருத்துகளைத் திரட்டி அச்சிட்டுப் பரப்பியும், நூற்பதிப்புக் கழகம் செய்துவரும் பணி எக்காலமும் நிலைத்துப் பயன்தரும் சீரிய தொண்டாகும்.

## கழகத்தின் தனித்தமிழ்த் தொண்டு

1936 முதல் தொடர்பாகச் 'செந்தமிழ்ச் செல்வி' இந்தி மொழி புகுத்தப் பெறுவதைச் சான்றுகளோடு கண்டித்து வருகின்றது. புகைவண்டி நிலையப் பெயர்கள், ஊர்ப் பெயர்கள் ஆகியவற்றைத் தனித்தமிழில் மாற்றுவதற்கும், 'தமிழ்நாடு' என்னும் பெயர் சூட்டுவதற்கும், தமிழிசை வளர்ச்சிக்கும், 'ஸ்ரீ' என்ற சொல்லை அகற்றுவதற்கும், திருக்கோயில் வழிபாடு இல்லச் சடங்குகள் ஆகியவை தமிழில் நடைபெறுதற்கும், ஆட்சியும் நீதிமன்றமும் தமிழில் நடைபெறுவதற்கும், ஆவணங்கள் தமிழில் எழுதப்பெறுதற்கும், தெற்கெல்லை வடவெல்லைகள் பிரிவினை ஏற்படுவதிலும் கழகம் பேரறிஞர் பலரின் துணை கொண்டு ஆற்றிய—ஆற்றிவரும் பணிகள் அளப்பில.

## வேண்டுகோள்

கழக நிலையங்கட்குச் சென்று நூல்களை வாங்குமாறும் 'செந்தமிழ்ச் செல்வியை' வரவழைக்குமாறும் தமிழறிஞர்கள், அன்பர்கள், பள்ளி ஆசிரியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், நூலகத் தலைவர்கள் முதலியோரைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். எளிதிலே செய்யக்கூடிய உதவியாகும்.

1/140, பிரகாசம் சாலை, அன்புள்ள,
சென்னை-1. வ. சுப்பையா
21-4-1975 கழக ஆட்சியாளர்.

# இந்திய மொழியின் எதிர்காலம் *

[மைசூர்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

**பேரா. டி ஜவரா கௌடா**]

இந்திய மொழிகளின் எதிர்காலம் அவை பயிற்று மொழி, ஆட்சி மொழி ஆகும் வாய்ப்பைப் பொறுத்துள்ளது. எல்லா மாநிலங்களிலும் அவ்வம் மாநில மொழிகளே பயிற்றுமொழி ஆதல் வேண்டும். இனியும் ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாக வைத்துக் கொள்வதில் பயனில்லை. ஆங்கிலவழி பயின்றால் பிற மாநிலங்களில் வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லுவது 'மண்ணின் மைந்தர்க்கே வேலை' என்ற எண்ணம் பரவலாகப் பெருகிவருகின்ற இந்நாளில் ஒரு மாயையே.

அவ்வாறே ஒவ்வொரு மாநிலத்திலும் அவ்வம் மாநில மொழியே ஆட்சிமொழியாதல் வேண்டும். ருசிய அறிஞர் லெனின் இதே கருத்தைத் தான் சொன்னார். வட்டார மொழி வளர்ச்சி பெற வாய்ப்பளிக்காது ஒரே மொழியைப் பல மாநிலங்களில் திணித்தால் 'மாநில சுயாட்சி' கோரும் நிலை உருவாகும் என்று எச்சரித்தார். இந்தியாவிலும் அதே நிலை தான். மாநில அளவில் அம் மாநிலமொழி ஆட்சிமொழி ஆதல் வேண்டும்.

நடுவண் அரசுத் தொடர்புக்கு ஆங்கிலமே நீடிக்கலாம். ஒரே மொழி தான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்பது தவறான கருத்து. இரண்டும், இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளையும் ஆட்சிமொழியாக உடைய நாடுகள் உலகத்தில் பல உள்ளன. எனவே ஆங்கிலம், இந்தி இரண்டையுமே வைத்துக் கொள்ளலாம்.

நாட்டு முன்னேற்றத்திற்கு ஒரு மொழிதான் தேவை என்பதில்லை. ஒரே மொழி பேசும் மக்கள்தாம் இன்று ஆந்திரம், தெலிங்கானா, மகாராட்டிரம்—விதர்பா போன்ற பிரிவுகளைக் கேட்கின்றனர். ஒரே மொழி அந்த மாநில மக்களையே இணைக்கவில்லையே. இந்நிலையில் இந்திய மக்கள் அனைவரையும் இணைக்க இந்தி மொழி ஒன்றே போதும் என்று கூறுவது தவறான வாதம். எனவே இரண்டு மொழிகளும் ஆட்சிமொழி களாக நீடிக்கலாம்.

அறிவுடைய மக்கள் பல மொழிகளைப் பயில்வதில் தவறில்லை. அப் படிப் பல மொழிகளைப் பயில விரும்புவோர்க்கு அரசு மொழிப்பயிற்சி நிலையங்களைத் தொடங்கவேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும் இந்தி யாவின் அரசியல் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பதினான்கு மொழி களையும் பயிற்றுவித்தல் வேண்டும். இதுதான் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதவி செய்யும்.

---

* 26-4-75 அன்று டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் கொடுத்த வரவேற் பின்போது ஆற்றிய உரையின் சுருக்கம்.

## மாண்புமிகு இராஜாஜி நினைவாலயத் திறப்பு விழாவில் டாக்டர் கலைஞர் அளித்த பரிசு

1975 மே 5 ஆம் நாள் கிண்டி காந்தி மண்டபத்தின் அருகிலே புதிதாகக் கட்டப் பெற்ற முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சராகவிருந்த மாண்புமிகு இராசகோபாலாச்சாரியார் (இராஜாஜி) அவர்கள் நினைவாலயக் கட்டடத்தைச் சர்வோதய கட்சித் தலைவர் திரு. ஜெ. பி. ஜெய பிரகாச நாராயண் அவர்கள் திறந்து வைக்கும்போது தாம் விரும்பி வேண்டியதற்கிணங்கத் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளாகிய 15-9-1975 முதல் தமிழ்நாட்டில் தொடங்கிய பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கைவிட்டு விடுவதாக உறுதிமொழி கூறினர். அச் செய்தியினை 6-5-75 இந்து இதழிலே கண்ட கழக ஆட்சியாளர் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து டாக்டர் கலைஞர் அவர்கள் தமது கண்ணெதிரே இருப்பதாகக் கருதிக் கைகூப்பி வாழ்த்தினர்.

செந்தமிழ்ச் செல்வியில் 'திருக்குறள் பணியே கழகத்தின் தனிப் பெரும்பணி' என்று எழுதி வந்த கழக ஆட்சியாளர் தாம் சென்னையில் 55 ஆண்டுகள் வாழ்ந்து வந்தும் கிண்டியில் குதிரைப் பந்தயம் நடைபெறும் இடத்தை ஒருமுறை கூடப் போய்ப்பார்க்காமலே இருப்பவர். தம் நண்பர்களில் பலர் பரிசுச் சீட்டு வாங்கியிருப்பவும் ஒரு முறை கூடப் பரிசுச் சீட்டு வாங்கியதில்லை என்று சொல்லாதிருக்கவும் 'போனகம் என்பது தான் உழந்துண்டல்' என்ற பொன்மொழியைக் கடைப்பிடித்துத் தாம் இதுகாறும் ஒருமுறை கூடப் பரிசுச் சீட்டு வாங்காதிருப்பவர்.

மதுக் குடியினைக் கொண்டுவந்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அதன் தீமையினைக் கண்டுணர்ந்து தமது ஆட்சிக் காலத்தே அதனை ஒழித்தபோதும் ஆட்சியாளர் அடைந்த மகிழ்ச்சிக் களவில்லை.

திருவள்ளுவர் திருக்கோயிலைத் திருத்தி யமைப்பதிலும், திருவள்ளுவர்க்குக் கலையழகு தரும் கோட்டம் அமைப்பதிலும் ஈடுபட்டிருக்கும் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் திருவள்ளுவர் காட்டிய நெறியில் நின்று தாம் வாழ்ந்து அவர் தம் ஆட்சி நிலைத்துப் புகழ் புண்ணியங்களை அடையுமாறு உளமார வாழ்த்தி வேண்டுகின்றார் கழக ஆட்சியாளர்.

— – —

## இந்தி எதிர்ப்பு வீரர்கட்குத் 'தாமிர பட்டயம்'

நாட்டு விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்ற அறப்போர் வீரர்கட்கு இந்திய நடுவண் அரசு 'தாமிர பட்டயம்' வழங்கியதுபோல் தமிழ் நாட்டில் தமிழ்மொழி காக்க இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டுச் சிறை ஒறுப்புக்குள்ளாகிய அறப்போர் வீரர் 45 பேருக்குத் தமிழ்ப் புத்தாண்டு நாளாகிய 14-4-75 அன்று, பாராட்டுரைகள் பொறிக்கப் பெற்ற செப்புத் தகடுகள் (தாமிர பட்டயங்கள்) தமிழக அரசின் சார்பில் வழங்கப் பெற்றன. மாவட்ட ஆட்சியாளர் திரு. ஒ. இராமச் சந்திரராவ் இப் பட்டயங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

இவ் விருதினைப் பெற்ற இந்தி எதிர்ப்பாளர்கட்கு எம்முடைய வாழ்த்துகளையும், விருதினை வழங்கிய தமிழக அரசிற்கு எம்முடைய பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் மணிவிழா

தமிழ்ப் பேரறிஞரும் தமிழ்நாடு சட்டப் பேரவையின் தலைவருமான **மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன்** அவர்களின் மணிவிழா 14-4-75 அன்று அவர்தம் சொந்த ஊரான செய்யாற்றில் சிறப்பாக நடைபெற்றது.



சிறந்த பேச்சாளரும், நூலாசிரியரும், நல்லாசிரியருமான புலவர் அவர்கள் எழுத்துத் தொண்டு, அரசியல் பணி, பொதுத்தொண்டு போன்ற பல துறைகளிலும் சிறந்து விளங்குபவர்.

உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளையவர்களிடம் தமிழ்க் கல்வி பயின்ற புலவர் அவர்கள் ஆசானைப் போன்றே எதையும் இளமையிலிருந்தே ஆராய்ச்சிக் கண்ணோடு பார்க்கும் ஆற்றல் பெற்றார். தம் ஆய்வுகளைக் கட்டுரைகளாகத் தமிழ்ப் பொழிலிலும், செந்தமிழ்ச் செல்வியிலும் தொடர்ச்சியாக எழுதி வந்தார்.

உரைவேந்தர் அவர்கள் வழியாகப் புலவர் அவர்கட்கும் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையாபிள்ளை அவர்கட்கும் தொடர்பு ஏற்பட்டது. அதன் பயனாய்ச் 'சங்க காலப் புலவர் வரிசை' 'சங்க கால அரசர் வரிசை' போன்ற பல வரிசை நூல்களும் திருமாவளவன், கால்டுவெல் ஒப்பிலக்கணத் தமிழாக்கம் (தொ 1) முதலிய நூல்களும் கழக வழி வெளிவந்தன.

பின்னர் அவர் எழுதிய நூல்களில் குறிப்பிடத் தக்கன 'கால்டுவெல் ஒப்பிலக்கணத் தமிழாக்கம்' கலித்தொகையைப் பற்றிய ஐந்து ஆராய்ச்சி நூல்கள் போன்றவை.

இளமையிலேயே தந்தை பெரியாரின் திராவிடர் இயக்கத்தில் ஈடுபட்டுப் பின்னர் அறிஞர் அண்ணாவின் அணியில் நின்று சமூக, அரசியல் தொண்டாற்றி வந்தார். செய்யாறு தொகுதியில் தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் நின்று மும்முறை வாகை சூடியவர்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற போது சட்டப் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றார். இலக்கியம், அரசியல் என்னும் இரு துறைகளிலும் சிறந்து விளங்கும் புலவர் அவர்கள் நீடூழி வாழ்க வென வாழ்த்துகிறோம்.

**குறிப்பு :** 12—5—75இல் திருவத்திபுரம் பேரூராட்சி மன்றத்தில், மன்றத்தலைவர் திரு. போ. கா. இராமசாமி அவர்கள் தலைமையில் 60ஆவது பிறந்த நாள் விழா நடைபெறும். நாடாளுமன்றப் பேரவைத் தலைவர் மாண்புமிகு தில்லான் அவர்களும், மேதகு ஆளுநர் கே. கே. ஷா. அவர்களும் பாராட்டுரை வழங்குவர்.

———

# செய்திகளும் குறிப்புகளும்

## எல்லோருக்கும் ருசிய மொழி

ஒரு மொழியை அம்மொழி அறியாத பிறமொழி மக்களுக்குக் கற்றுக் கொடுப்பது என்பது எளியசெயலன்று. ருசிய மொழியை இந்தியர்களுக்குக் கற்பிப்பதற்காக டில்லியிலுள்ள சோவியத் தூதரகத்தின் செய்தி விளம்பரத் துறை 'எல்லோருக்கும் ருசிய மொழி' (Russian for Everybody) என்ற ஆங்கில மாத இதழை இவ்வாண்டு சனவரித் திங்களிலிருந்து வெளியிடத் தொடங்கியுள்ளது.

இதன் சிறப்பியல்பு மொழியைக் கற்பிப்பதற்குப் பல்வேறு புறக் கருவிகளை வழங்குவதாகும். அதில் சிறப்பானது ருசிய மொழிப் பாடங்கள் அடங்கிய ஒலித்தட்டு (Gramaphone record) இதழுடன் அன்பளிப்பாக அளிக்கப் பெறுவது. இதழில் வெளியாகும் பாடங்களை ஒலித்தட்டு உதவியுடன் படிக்கலாம்

இன்று தமிழ் மொழியை மேனாட்டார் பலர் பயில்கின்றனர். அவர்களுக்கும் இந்தியாவிலுள்ள பிற மொழியாளர்கட்கும் பயன்படும் வகையில் தமிழ் வளர்ச்சியைத் தன் முழு மூச்சாகக் கொண்டுள்ள தமிழக அரசு இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

## தில்லியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா

இந்தியத் தலைநகரில் வடநாட்டினரும் வெளிநாட்டினரும் அடிக்கடி கண்டுகளிக்கும் வகையில் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருவுருவச் சிலை தமிழக அமைச்சர் **மாண்புமிகு இராசாராம்** அவர்கள் முயற்சியால் திறந்து வைக்கப் பெற்றுள்ளது.

ஏப்ரல் 12 ஆம் நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் **பக்ருதீன் அலி அகமது** அவர்கள் சிலையைத் திறந்து வைத்துப் பேசினார். திருக்குறள் தமிழ் மறை என்று தொன்று தொட்டுப் பாராட்டப்படுகிறது என்றும் எச்சமயத்தாருக்கும் ஏற்றதாக உள்ளது என்றும் வள்ளுவரின் பரந்த நோக்கும் மனிதாபிமானமும்தான் உலகைக் காக்க முடியும் என்றும் கூறினார்.

விழாவில் வரவேற்புரை நிகழ்த்திய மாண்புமிகு இராசாராம் அவர்கள், திருக்குறள் உலக இலக்கியம் என்றும் அதை இந்தியத் தேசிய இலக்கியமாக்க வேண்டுமென்றும் கூறினார்.

விழாவில் கலந்துகொண்ட நடுவண் அரசு **நிதி அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம்** அவர்கள் 'திருக்குறள் சனநாயக நூல்' என்றும் 'தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் நூல்' என்றும் பாராட்டினார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழரின் சமூக வாழ்க்கையை எடுத்துக் காட்டும் திருக்குறள்பற்றித் தமிழர்கள் பெருமைப்பட வேண்டுமென்றார்.

விழாவை யொட்டித் தமிழகத்திலிருந்து பல்வேறு அறிஞர்கள் தில்லிக்குச் சென்று கருத்தரங்கிலும் பட்டிமன்றத்திலும் கலந்துகொண்டு குறளின் பெருமையைப் பாரறியச் செய்தனர்.

## உலகத் தெலுங்கு மாநாடு

திராவிட மொழிகளில் தமிழ் மொழிக்கு அடுத்ததாகத் தொன்மையிலும் இலக்கியச் சிறப்பிலும் சிறந்து விளங்குவது தெலுங்கு மொழியாகும். 'களி தெலுங்கு' என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளையாலும் 'சுந்தரத்தெலுங்கு' என்று பாரதியாராலும் பாராட்டப் பெற்ற இம் மொழி பேசும் மக்கள் உலகோர் கண்டு வியக்கும் வண்ணம் நாம் 'உலகத் தமிழ் மாநாடு' கொண்டாடியது கண்டு தம் மொழிக்கும் அவ்வாறு விழா

வெடுக்க எண்ணி நாம் நடத்திய அதே முறையில் 'முதல் உலகத் தெலுங்கு மாநாட்டை' ஏப்ரல் 12-18 நாள்களில் ஐதராபாதில் நடத்தி யுள்ளனர். இவ்வாறே முன்பு 'உலக இந்தி மாநாடும்' 'உலக சமஸ்கிருத மாநாடும்' நடத்தப் பெற்றன.

"கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும், உன்னு தரத் துதித்தெழுந்தேஒன்று பல ஆயிடினும்" என்று தமிழ்த்தாயைப் பாராட்டிப் பாடினர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை. இது தமிழனின் தற் பெருமையே யன்றி மொழியியலறிவுக்குப் பொருந்தாத ஒன்று என்று இன்று தமிழறிஞர்கள் சிலருட்படப் பலர் கருதுகின்றனர்.

திராவிட மொழிகளில் இலக்கியச் சிறப்பும் தொன்மையும் பெற்று விளங்குவது தமிழ்மொழி ஒன்றேயாகும். தமிழ் அன்னை அரியணை யிலேறிக் கிரேக்க, ரோம நாடுகளோடு தொடர்பு கொண்டிருந்தபோது பிற திராவிட மொழிகள் சில தோன்றிய நிலையிலும் பல தோன்றா நிலை யிலும் இருந்தன. இது வரலாற்று உண்மை. இவ்வாறிருக்கச் சுந்தரம் பிள்ளை அவர்களின் கூற்றில் குறை ஏன் காணவேண்டும்?

தெலுங்கு மொழி போன்ற பிற திராவிடமொழிகள் வடமொழித் தாக்குதலுக்குக் கடுமையாக ஆட்பட்டு இன்று உருமாறித் திகழ்கின்றன. அத் தாக்குதல் இல்லையெனில், திராவிடமொழிக் கூறின் அடிப்படை அமைப்பை அப்படியே காத்து வைக்கப்பெற்றிருப்பின் இவையனைத்தும் இன்றும் தமிழ்மொழி போலவே திகழும். பண்டைய இலக்கியங்கள் தமிழுக்குக் கேடயமாக இருந்தனவாதலால் தமிழ் தன் தூயஉருவைக் காப்பாற்றிக் கொண்டது.

இவ்வுண்மையை இன்று பிற திராவிட மொழியாளர்கள் ஒத்துக் கொள்ள மறுக்கின்றனர். தமிழ் மொழி தங்கள் மொழிக்கு மூலமொழி என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள அவர்கள் நாணுகின்றனர்.

இருப்பினும் நம் இனத்தைச் சார்ந்த தெலுங்கு மொழி 'உலக மாநாட்டை'ச் சிறப்பாக நடத்தி முடித்திருப்பது அறிந்து பெருமகிழ்ச்சி யடைகிறோம். வெல்க அவர்கள் முயற்சி.

## டாக்டர் மு. வ. திருவுருவப்படத் திறப்பு விழா

டாக்டர் மு. வ. இலக்கிய மன்றத்தின் சார்பில், கடந்த 29-4-75 மாலை, சென்னைப் பல்கலைக் கழகச் செனட் மண்டபத்தில், பேராசிரியர், டாக்டர் மு. வ. அவர்களின் எட்டடி உயரமுள்ள வண்ண ஓவியப்படத் திறப்பு விழா, மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார். தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் டாக்டர் மு. வ. அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சி. அவர்கள் சிறப்புரை ஆற்றத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் ஏற்புரை நிகழ்த்த விழா இனிது நடைபெற்றது.

## சோதிட வல்லுநர்க்குச் சான்றிதழ்

மற்றத் துறைகளில் சான்றிதழ் (Diploma) வழங்கப் படுதல் போல் சோதிடம் தெரிந்த வல்லுநர்க்கும் சான்றிதழ் வழங்கப் பெறுதல் வேண்டும் என்னும் கருத்தினைக் கடந்த 15-4-75 இல் கல்கத்தாவில் கூடிய அனைத்திந்திய சோதிடர்கள் மாநாடு வற்புறுத்தியுள்ளது. இம் மாநாட்டில் 110 சோதிடர்கள் கலந்துகொண்டனர். அனைத்திந்தியாவிலுள்ள

சோதிட வல்லுநர்கள் கூடிக் கல்கத்தாவில் தலைமைக் கழகம் அமைத்துள்ளனர். இக் கழகத்தின் மூலம் சோதிடக் கலை பற்றிய பயிற்சி அளிக்கவும் திட்டமிட்டுள்ளனர். இம் மாநாடு சுவாமி மதனனண்டஜீ என்பவர் தலைமையில் நடைபெற்றது. நாடு முழுதுமிருந்து 806 சோதிட வல்லுநர்கள் வந்திருந்தனர்.

## இந்தியாவின் முதல் செயற்கைக் கோள்

*19-4-75* அன்று 'ஆரிய பட்டா' என்னும் பெயருடன் இந்தியாவின் செயற்கைக் கோள் உருசியாவிலுள்ள விண்வெளி ஆய்வு நிலையத்திலிருந்து ராக்கெட் மூலம் விண்வெளியில் செலுத்தப்பெற்றது. 300 கிலோ கிராம் எடையுள்ள இந்தச் செயற்கைக்கோள் மணிக்கு 29 ஆயிரம் கிலோ மீட்டர் வேகத்தில் விண் வெளியில் சுற்றி வருகிறது. இந்தக் கோளிலிருந்து அறிவியல் செய்திகள் அனுப்பப்படுகின்றன. அதற்கெனச் சில கருவிகள் அதனுள் பொருத்தப்பட்டுள்ளன. அச் செய்திகள் ஸ்ரீ அரிகோட்டா, மாஸ்கோ, பிரான்ஸ் ஆகிய இடங்களிலுள்ள ஆய்வுக் கூடங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

இச் செயற்கைக் கோள் 147 செ.மீ. அகலமும், 116 செ.மீ. உயரமும் உடைய உருண்டை வடிவில் 26 பட்டைகளுடன் அமைந்துள்ளது. 96 நிமிடத்திற் கொரு முறை இஃது இப் பூவுலகைச் சுற்றி வருகிறது. இந்தச் செயற்கைக் கோளைத் திட்டப்படுத்திய அறிஞர் யு. ஆர். ராவ், அறிஞர் தவான் ஆகியோர் பாராட்டுக்குரியராவர்.

## 'நெஞ்சுக்கு நீதி' நூல் வெளியீட்டு விழா

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் தன் வரலாற்று நூலாகிய 'நெஞ்சுக்கு நீதி' வெளியீட்டு விழா 30-4-75 இல், சென்னைக் கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

விழி இழந்த ஆசிரியர் நல்ல தம்பி என்பவர் தலைமை தாங்க, தொழு நோயுற்ற கவிஞர் முகமது அலி என்பவர் நூலினை வெளியிட, இருகால்களையும் இழந்து உடல் ஊனமுற்ற சாந்தகுமாரி நூலின் முதற்படியைப் பெற்றுக்கொள்ள விந்தையான தொரு விழாவாக இஃது அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

'தினமணிக் கதிர்' பொறுப்பாளர் திரு. ஆர். இராம கிருட்டிணன் வரவேற்புரை நிகழ்த்தினர். தவத்திரு குன்றக்குடி அடிகளார், கீ. இராமலிங்கனர், டி, செங்கல்வராயன், அப்துல் சமது, ம. பொ. சி., மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன், மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். தினமணி கதிர் ஆசிரியர் 'சாவி' நன்றி கூறினர்.

## மதுரைத் தமிழிசைச் சங்கக் கட்டிடக் கால்கோள் விழா

*24-4-75* இல் மதுரையில், தமிழகச் சட்ட, உணவு அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர்கள் தலைமையில் மதுரைத் தமிழிசைச் சங்கக் கட்டிடத்தின் கால்கோள் விழா நடைபெற்றது. முதல்வர் டாக்டர் கலைஞர் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டித் தமிழிசை தமிழ்நாட்டில் முதலிடம் பெறவேண்டியதன் இன்றியமையாமையினை விளக்கிப் பேசினர். கட்டிடம் அமைக்க மூன்று நூறாயிரம் நன்கொடை வழங்கிய செட்டி நாட்டரசர் இராசா சர் முத்தைய செட்டியார் தமிழிசைச் சங்க மலரை வெளியிட்டார். தலைமை தாங்கிய அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் செட்டிநாட்டரசர்கள் ஆற்றிய தொண்டுகள் பற்றி விளக்கிப் பேசினர்.

## 'கந்தரலங்காரம்' இசைத்தட்டு வெளியீட்டு விழா

6-5-75 இல் சென்னை இராசேசுவரி திருமண மண்டபத்தில், சீர்காழி கோவிந்தராசன் பாடியுள்ள 'கந்தரலங்காரம்' இசைத் தட்டு வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. 'கிராம போன்' கம்பெனியும் சரசுவதி ஸ்டோர்ஸ் நிறுவனமும் சேர்ந்து இவ் விழாவினை நடத்தின. விழாவிற்கு ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நடுவர் மாண்பமை மகாராஜன் அவர்கள் தலைமை தாங்கினர். வாணி செயராம் இறைவணக்கம் பாடினர்.

முதல் இசைத் தட்டைத் திருமுருக கிருபானந்த வாரியார் வழங்க, சினிமா அதிபர் சின்னப்பாத் தேவர் பெற்றுக் கொண்டார். கிருபானந்த வாரியார் சீர்காழி கோவிந்தராசனுக்குப் பொன்னுடை போர்த்தினர். கந்தரலங்காரப் பாடல்களுக்கு இசையமைத்த திரு. டி. ஆர் பாப்பா அவர்களையும் பாராட்டினர்.

சவுந்திரா கயிலாசம் அம்மையார், கவிஞர் எஸ். டி. சுந்தரம் ஆகியோர் உரையாற்றினர். திரு. ஏ. வி மெய்யப்ப செட்டியார் அனைவரையும் வரவேற்றார். திரு. ஆல்பிரட் தங்கையா நன்றி கூறினர்.

---

# மதிப்புரை

## இளங்கோ அடிகளின் நாடகத்திறன்

[ஆசிரியர் : மு. வை. அரவிந்தன், எம். ஓ. எல். வெளியிட்டோர் : மணிவாசகர் நூலகம், சிதம்பரம். விலை : ரூ. 1-50]

வேலூர் மகிழ்நன் தமிழ்க் கழகச் சார்பில் இந்நூலாசிரியர் சிலப்பதிகாரம் பற்றி ஆற்றிய இலக்கியத் திறனாய்வுச் சொற்பொழிவே "இளங்கோ அடிகளின் நாடகத்திறன்" என்னும் இச் சிறு நூலாக உருப் பெற்றுள்ளது. சிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியம் என்பதனைத் தக்க சான்றுகளோடு விளக்குகிறார் இந் நூலாசிரியர். மேலும் நாடகக் கதை, நாடக அரங்கு, நாடக அமைப்பு, நாடக மாந்தர், நாடகத்தின் வகை ஆகிய இன்னபிற செய்திகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப் பட்டுள்ளன. இலக்கியத்திறனாய்வாளர்க்கு இந்நூல் நல்லதொரு விருந்தாக அமைந்துள்ளது எனில், அது மிகையன்று.

## மாநகர் மதுரை

[ஆசிரியர் : புலவர் ச. சாம்பசிவனார், M. A. வெளியீடு : வளவன் வெளியீடு, 59-ஏ மேல ஆவணி மூலவீதி, மதுரை. விலை : ரூ. 7-00]

வரலாற்றிலும், இலக்கியத்திலும் இடம் பெற்று ஒரு மாநகர் பெற வேண்டிய மாட்சிகளையெல்லாம் பெற்றுத் திகழ்வது மதுரை மாநகரமாகும். இதனை 'இலக்கிய மதுரை', 'வரலாற்று மதுரை,' 'இன்றைய மதுரை,' 'மதுரையைச் சுற்றிலும்' என்னும் 5 தலைப்புகளில் மதுரை மாநகரின் மாண்பினை விளக்குகிறார் இந் நூலாசிரியர். வரலாற்று ஆசிரியர்கட்குப் பயன்படும் வகையில் அமைந்துள்ளது இந்நூல்.


---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்திற்காக சென்னை 600001, 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

உ

# தமிழர் சமய இலக்கியப் பேழை

## (சைவம் - வைணவம்)




தெய்வப் பொலிவுடன்

அருள் நல்கும் பேழை

உயரம்: 3′ 3″ — அகலம்: 1′ 9″

**முதல் தட்டு:** பன்னிருதிருமுறை நூல்கள், மெய்கண்ட சாத்திரம் 14 உரை, சிவஞான பாடியம்

**2 ஆந்தட்டு:** பன்னிருதிருமுறைப் பெருந்திரட்டு, மூவர் தேவார உரைகள், 4 திருமுறைகளைப் பற்றி ஒளிநெறிக் கட்டுரைகள், விநாயக புராண வசனம் முதலியன

**3 ஆந்தட்டு:** திருவருட்பாப் பெருந்திரட்டு, தாயுமானவர் பாடல் உரை, பட்டினத்தார் பாடல் உரை, நாலாயிரம், அட்டப்பிரபந்தம், நால்வர் வரலாறுகள், ஆழ்வார்கள் வரலாறு, ஆழ்வார் வழிக்குரவர் வரலாறு முதலியன.

ரூ. 150/- பெறுமான பேழையுடன்

ரூ. 660/- மதிப்புள்ள நூல்களின்

**குறைந்த விலை ரூ. 650.**

பதிவு எண் : M. 4899

# The Muthialpet Benefit Fund Ltd.

(Estd : 1895) — (Tel. : 23660 & 24046)

No. 54, Thambu Chetty Street, Madras-1.

*Office Hours :* *8-30 to 11-30 a.m.* *2 to 5 p.m.*

Except ON FRIDAYS AND OTHER PUBLIC HOLIDAYS

SUNDAY WORKING DAY

Increased rates of interest on *FIXED DEPOSITS*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 Months | 7% | 1 Year | 9% | 3 Years | 10% |
| 6 Months | 7½% | 2 Years | 9½% | 5 Years | 11% |

7 Years and above 11½%

The above rates are increased with effect from 1—1—'75 ½ % Extra Interest on a Single Deposit of Rs. 10,000/- and above.

¾% Extra Interest on a Single Deposit of Rs. 25,000/-and above.

1% Extra interest on a Single Deposit of Rs. 50,000/ and above.

Further 1% Interest allowed for Educational, Religious and Charitable Institutions.

Minimum amount acceptable Rs. 100/-

INTEREST PAYABLE ON THE Ist OF EVERY MONTH.

The Existing Deposits will also get the Benefit of the enhanced rates from 1—1—1975 till the date of Maturity.

On standing instructions Interest remitted to parties or to their Bankers direct every month

On SAVINGS DEPOSITS 6% effective from 1—5—'74, withdrawal by Cheques

ALSO ACCEPTS RECURRING DEPOSITS : NO ENTRANCE FEE

*Amount receivable at the end of each period.*

| Monthly Deposits | 12 months | 24 months | 36 months | 48 months | 60 months | 72 months | 84 months |
|---|---|---|---|---|---|---|---|
| Rs. | Rs. | Rs. | Rs. | Rs. | Rs. | Rs. | Rs. |
| 5 | 63 50 | 135 00 | 212 50 | 300 00 | 400 00 | 500 00 | 625 00 |
| 10 | 127 00 | 270 00 | 425 00 | 600 00 | 800 00 | 1,000 00 | 1,250 00 |
| 25 | 317 50 | 675 00 | 1,062 50 | 1 500 00 | 2 000 00 | 2,500 00 | 3.125 00 |
| 50 | 635 00 | 1,350 00 | 2,125 00 | 3 000 00 | 4,000 00 | 5,000 00 | 6,250 00 |
| 100 | 1,270 00 | 2,700 00 | 4,250 00 | 6 000 00 | 8 000 00 | 10.000 00 | 12.500 00 |
| 200 | 2,540 00 | 5,400 00 | 8.500 00 | 12,000 00 | 16,000 00 | 20,000 00 | 25,000 00 |
| 300 | 3 810 00 | 8,100 00 | 12.750 00 | 18,000 00 | 24,000 00 | 30 000 00 | 37 500 00 |
| 400 | 5,080 00 | 10,800 00 | 17.000 00 | 24,000 00 | 32.000 00 | 40,000 00 | 50,000 00 |
| 500 | 6,350 00 | 13,500 00 | 21,250 00 | 30,000 00 | 40,000 00 | 50.000 00 | 62,500 00 |

Rs. 5/- and multiples received with effect from 1—9—1974

*LOANS :* *Rates of Interest charged.*

On Gold Jewels 15%

On House Properties within Madras City with Recurring deposit system ... 15%

ON DEPOSITS :

Fixed Deposits 1½% Over and above the rate on Fixed deposits.

Recurring Deposits 9%, 10½% & 15%

B. Parandhama Naidu, B.Sc., *President.*

P. Bhoopathi, B. Com., *Secretary.*

APPAR ACHAKAM, MADRAS-1.